# மன்றம்

வார ஏடு ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 18 ★ 8-9-57 சென்னை ★ விலை 16 காசு


# கலைச்சுடர் அணைந்தது!

நூலேச்சுடர் அணைந்தது!

கலை உலகில் சோகமெனும் இருள் படர்ந் துள்ளது!

மக்கள் முகத்தில் தவழ்ந்த சிரிப்பு மறைந்து விட்டது, அவர்கள் உள்ளத்தில் இருந்த மகிழ்ச்சி சிதைந்து விட்டது! சிரிப் பொலி ஆர்த்த இடத்தில் அழுகையொலி! மகிழ்ச்சியால் நீர் துளிர்த்த கண்களில் துயரத்தின் கண்ணீர்!

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ் ணன் இறந்தார்!

வேதனை, வேதனை, தாங்க முடியாத வேதனை!

பேச்சாலும், பாட்டாலும், நடிப்பாலும், பண்பாலும் பல்லாயிரக் கணக்கானவர் களை மகிழ்வித்தார் அவர்; அவ்வாறு மகிழ்ச்சியில் திளைத்திருந்த எவரும், அவர் இறந்தால் எத்தகைய வேதனை சூழும் என் பதை எண்ணிப் பார்த்த தில்லை! யாரும் எதிர்பார்க்க வில்லை, இந்த வயதில் அவ ரைச் சாவு பறித்துச் செல்லு மென்று!

நிலவு பொழிந்திட, தென்றல் வீசிட, மலர்ச்சோலையில் மலர்ந்த மலர்களை எடுத்து முகர்ந்து, மகிழ்ச்சியுடனிருக் கும் வேளையில், திடீரென்று நிலவுமறைந்து இருள் சூழ்ந்து, தென்றல் நின்று புயல் வீசி, மலர்ச் செடிகளைப் பறித்து விட்டுச் சென்றது போலிருக் கிறது, கலைவாணர் திடீரென நம்மை விட்டுப் பிரிக்கப்பட் டது!

யாழ் முறிந்தது, இனிய இசை நின்றது!

உல்லாச ஓடம் உடைந்தது, கடல் அலை மூழ்கடித்தது!

கலைவானில் ஒளிவிட்ட பெரு நட்சத்திரம் உதிர்ந்துவிட்டது! சிந்து பாடி சிரித்தோடி வந்த சிற்றாறு, வரண்ட மணற்பரப் பில் மறைந்து விட்டது!

நகைச்சுவை மன்னர் இறந் தார், அவரால் ஆளப்பட்ட குடி மக்கள் வேதனையில் துடிக்கின் றனர்! உள்ளங்களிலெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தைப் பாய்ச்சி வந்த காவலன், பெரும் வேதனைத் தீயையல்லவா மூளச்செய்து போய்விட்டார்! அவரது படங்களைப் பார்த்துக் களிப்புறாத தமிழர் கள் இருந்திருக்க மாட்டார்கள், இன்று அவர் பிரிவால் துயருறாத தமிழரும் இருக் கமாட்டார்கள்!

தமிழகம் முழுவதும் அவருக்கு ஒரு குடும்பமாக இருந்தது; நல்லவர்கள் அனை வரும் அவருக்கு உறவினராக இருந்தார் கள்! வேறு எந்த நடிகரும் பெறாத இடத்தை, தமிழ் மக்களிடம் கலைவாணர் பெற்றிருந்தார்!

**என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமிழ் நாட்டுத் திரை வரலாற்றில் ஒரு சகாப்தம்!**

கலை உலகில் ஒரு புதுமையை அவர் உண்டாக்கினார். தேங்கிக் கிடந்த கலை உல கில் ஒரு மறுமலர்ச்சியை அவர் ஆரம்பித்து வைத்தார்!

அவர் சிரித்தார், அந்தச் சிரிப்பில் சிந்தனை விளைந்தது!

மக்களை அவர் சிரிக்க வைத்தார், அத்துடன் சிந்திக்கவும் வைத்தார்!

புராணக்கதைகள் மலிந்திருந்த காலம் அது! பரமசிவனும் நாரதரும், பாற்கடலும் விட்டுணு மூர்த்தியும், பத்திர காளியும் சக்தி விநாயகரும், இந்திரனும் சந்திரனும், தாரையும் மேனகையும், கற்பகத் தருவும் காம தேனுவும்-இவைகள்தாம் முக்கிய கதாபாத்திரங்களாக இருந்தன அப் பொழுது! மாயங்கள், ஜாலங்கள், மந்தி ரங்கள், தந்திரங்கள், "பிடி சாபங்கள்" பிடி சாம்பல், இவைதாம் கதை களுக்கு அடிப்படையாக இருந்தன! புராணக் கதைகளை, பொருந்தா கற் பனைகளை எதிர்த்து, சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப கலைவாணர் முன்வந்தார்!

புராணக் கதைகளில் வேடிக்கை யான காரியங்களைச் செய்துகொண் டிருந்தவர் நாரதர்! அந்த நார தரோ, மேகமண்டலத்தில் உலவிக் கொண்டிருந்தார்! நமது கலைவாணர், மேக மண்டலத்தில் போய்க் கொண்டி ருந்த நகைச் சுவையை மண்ணுலகத் துக்குக் கொண்டு வந்தார்! கடவுளர் களிடம் பேசப்பட்ட கற்பனைகளை மக்க ளிடம் கொண்டுவந்தார்! புராணக்கதை களை விட்டு, மெதுவாக மக்கள் கதை கள் திரை உலகில் வருவதற்கு கலை வாணர் முயன்றார்! அவர் ஆரம்பித்த முயற்சி வெற்றி பெற்றது என்றே கூறவேண்டும்!

புராணக் கதைகளில் காணப்படும் பொருந்தாக் கூற்றுகளை மறுத்து தமது சீர்திருத்தக் கருத்துக்களை கலைவாணர் பரப்பிய விதம் மிக வேடிக் கையானது. புராணப் படங்களில்,

(12-ம் பக்கம் பார்க்க)



சேலம் மாவட்டத்தைச்சேர்ந்த தாரமங்கலம் பஞ்சாயத்து போர்டில் அறிஞர் அண்ணா அவர் கட்கு வரவேற்பும், அண்ணா படத்தை கலைவாணர் திறந்து வைக்கும் விழாவும் நடைபெற்றது. கடைசி யாக கலைவாணர் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி இதுவாகும்.

(போட்டோ—சாமி ஸ்டுடியோ, சேலம்)




## விசாலாட்சி அம்மையார்

நமது அருமைத் தோழரும் "தென்றல்" ஆசிரியருமான கவிஞர் கண்ணதாசன் அவர்களின் தாயார் விசாலாட்சி அம்மையார் அவர்கள் சென்னையில் 23—8—57 அன்று இயற்கையெய்தியமை குறித்து மிகவும் வருந்துகிறோம். தாயை இழந்து துயருறும் தோழர் கண்ணதாசன் அவர்கட்கும் அவரது சகோதரர் ஏ. எல். சீனிவாசன் அவர்கட்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

**வினா:** திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெள்ளையர் இந்த நாட்டை விட்டு வெளியேறியதை விரும்பாதவர்கள் என்றும், வெள்ளையர்க்கு அடிவருடிகளாக வாழ்ந்தவர்கள் என்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டுள்ளாரே, அது பற்றிய கருத்து என்ன?

**விளக்கம்:** 1947 ஆம் ஆண்டு வெள்ளையர் ஆதிக்கந்தான் இந்த நாட்டை விட்டு வெளியேறிற்றே ஒழிய, வெள்ளையர்கள் வெளியேறிவிட வில்லை. அவர்களிலே பலர் தம் சொத்துரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள இங்கே தங்கினர்; பலர் அரசாங்கத் துறையிலும தனியார் துறையிலும் அலுவல் பார்ப்பதற்காக இங்கேயே தங்கினர்; சிலர் தம் இளைப்பாறிய காலத்துச் சம்பளம்வாங்குவதற்காக இங்கேயே தங்கினர். எனவே வெள்ளையர் வெளியேறினர் என்று கூறுவது தவறு வெள்ளையர் ஆதிக்கம் ஒருவகையில் வெளியேறிற்று என்று தான் கூறவேண்டும்.

வெள்ளையர் ஆதிக்கமாவது அறவே வெளியேறி விட்டதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. காமன்வெல்த்தின் பிணைப்பையும், பிரிட்டனின் தலைமையையும், அதற்கு ஓரளவுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையையும் இந்தியா, தானே விரும்பி ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்குப் பிரிட்டனின் ஆதிக்கம், இந்தியாவின் மீது இன்னமும் இருந்து வரவே செய்கிறது.

வெள்ளையர் ஆதிக்கம் இந்த நாட்டை விட்டு வெளியேறிய போது திராவிட முன்னேற்றக் கழகம் இருந்ததா என்றால், அப்போது அது பிறக்கவே இல்லை. அது 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் தான் முதன் முதலாகத் தோற்றங் கொண்டது. எனவே வெள்ளையர் ஆதிக்கம் வெளியேறியபோது 1947 ஆம் ஆண்டில் அந்த வெளியேற்றத்தைத் தி. மு. கழகம் விரும்பவில்லை என்று கூறுவது பொருத்தமில்லாத கூற்றாகும்.

தி. மு. கழகத்தில் இப்பொழுது ஈடுபாடு கொண்டுள்ள அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்த பிறரும் திராவிடக் கழகமாக இருந்து கொண்டு வெள்ளையர் ஆதிக்கம் வெளியேறியதற்கு வருத்தம் தெரிவித்தார்கள் என்று கருதி அமைச்சர் சுப்பிரமணியம் மேற் கண்டவாறு கூறினார் என்று வைத்துக் கொண்டாலும், அதுவும் முழுக்க முழுக்க அறியாமை நிரம்பிய தவறான கூற்றாகும்.

தி. மு. கழகத்தில் இன்று இருந்து வருகிற அறிஞர் அண்ணா அவர்களும், அவரைச் சார்ந்த பிற நண்பர்களும் திராவிடக் கழகத்தில் இருந்த போது, பெரியார் அவர்களுக்கு மாறுபாடாக 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளை மகிழ்ச்சிக்குரிய நாளாகவே கருதினார், பெரியார் அவர்களும் அவரைச் சார்ந்த பிறரும் அந்த நாளைத் துக்க நாளாகக் கருதவேண்டும் என்று அறிக்கை விட்டபோது அறிஞர் அண்ணா அவர்கள் "திராவிட நாடு" இதழில் அந்த நாள் மகிழ்ச்சியோடு வரவேற்பதற்குரிய ஒரு நாளே என்று அறிக்கை வெளியிட்டார்கள். வெள்ளையர் அல்லது வெள்ளையர் ஆதிக்கம் வெளியேறியதைத் தி. மு. கழகத்தார் விரும்பவில்லை என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறுவது எவ்வளவு பொருளற்ற புன்மைமொழி என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மேலும் வெள்ளை முதலாளிகளின் ஆதிக்கம் மேலும் இந்தியத் துணைக் கண்டத்தில் நீடிக்க விடலாகாது, அவர்களது தொழில்களெல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று தான் தி. மு. கழகம் அழுத்தந் திருத்தமாகக் கூறி வருகிறது, ஆனால் வெள்ளை முதலாளிக்கு அரவணைப்புத் தந்து, அவர்களது தொழில்கள் மேலும் மேலும் இங்கு வளர இடமளித்து வருவது இன்றைய காங்கிரசு ஆட்சியேயாகும். உள்ளபடியே வெள்ளை முதலாளிகள் வெளியேறுவதை விரும்பாமல், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் செயல்கள் புரிந்து வருவது ஆளவந்துள்ள காங்கிரசே யாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெள்ளையர்க்கு அடிவருடிகளாக வாழ்ந்துவந்தனர் என்ற மாபெருங் குற்றச்சாட்டை உண்மையும் வகையும் தெரியாமல் அமைச்சர் சுப்பிரமணியம் உளறிக் கொட்டியுள்ளார்.

மேலே விளக்கிக் காட்டியவாறு வெள்ளைக்காரர்கள் இந்தத் துணைக்கண்டத்தை ஆண்டகாலத்தில் தி. மு. கழகம் தோன்றவே இல்லை. எனவே அவர்களுக்கு அடிவருட வேண்டிய நிலைமை தி. மு. கழகத்தார்க்கு ஏற்படவே இல்லை. இப்பொழுது தி. மு. கழகத்தவர்களாக இருப்பவர்கள், முன்னர் வெள்ளையரின் அடிவருடிகளாக இருந்திருக்கக் கூடுமே என்று அமைச்சருக்குக் கேட்கத் தோன்றும். அப்படிப்பார்த்தால் தி. மு. கழகத்தில் இருப்பவர்களில் பெரும்பாலோர் இந்திய விடுதலைப் போராட்டக் காலங்களில் காங்கிரசில் இருந்துவிட்டுப் பின்னர் தி. மு. கழகத்தில் வந்து சேர்ந்தவர்களாகவும், மாணவர் நிலையிலிருந்து அண்மையில் வந்து சேர்ந்தவர்களாகவும், பாட்டாளி தொழிலாளி உழவர்களாக இருந்து பாடுபடுபவர்களாகவும் தான் இருந்து வருகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களைப் போன்ற மிகச்சிலர்தான் நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அந்த ஒரு சிலரும் திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பாடுபடும் பொதுப்பணியாளர்களாக இருந்து வந்திருக்கிறார்களே ஒழிய, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு வேலைபார்த்துக் கொடுத்தோ, அதற்கு மிக மிகக் கீழ்ப்படிந்த வேலைக்காரன் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோ, அதனிடம் கைநீட்டி கூலியோ, சம்பளமோ வாங்கியோ அறியாதவர்கள். அறிஞர் அண்ணாவோ, சம்பத்தோ, கருணாநிதியோ, நடராசனோ, கண்ணதாசனோ, சிற்றரசோ, அன்பழகனோ, ஆசைத்தம்பியோ, ராமச்சந்திரனோ, ராமசாமியோ, நெடுஞ்செழியனோ வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியிடம் அடிமைவேலை பார்த்தோ அதன் அடிவருடியோ, அதன் தயவை நாடியோ, அதனிடம் ஒரு தம்பிடி அளவுகூட சம்பளம் வாங்கியோ வாழ்ந்தவர்களல்லர். எனவே தி. மு. கழகத்தவரை வெள்ளையர் அடிவருடி என்று அமைச்சரோ, அவர் போன்ற பிறரோ அவ்

(11-ம் பக்கம் பார்க்க)

## குமரி முனையில்



நகைச்சுவையும் நட்புச்சுவையும்.

# மன்றம்

ஞாயிறு 8—9—57 சென்னை


## — கலைவாணர்

நகைச் சுவை நடிகர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பிரிவு, தமிழ் நாட்டுக்கும் தமிழ்க் கலைக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கலையுலகின் பெருஞ் செல்வமாக விளங்கியவரை இழந்து, இன்று தமிழக மக்கள் சோகம் நிறைந்த முகத்தினராய் கண்ணீருகுத்து நிற்கின்றனர். பல்லாண்டுகளாக நாடக மேடையிலும், சினிமாத் திரையிலும், தனது கருத்து மிக்க நகைச் சுவை விருந்தை வரையாது வாரிவாரித் தந்து மகிழ்வித்த கலைஞர் ஒருவரை இழந்து நாடு தவிக்கின்றது. மீண்டும் அவர் போன்ற ஒரு கலைஞர்-நகைச் சுவை மன்னர்-சிரிப்பில் கருத்துக்களைச் சிதறிடும் சிந்தனையாளர்-கலையறிவும் மனிதபிமானமும் ஒருங்கே படைத்த செல்வர்-சீரிய பண்பாளர் நல்ல நண்பர்-நல்லவர்-ஆகிய ஒருவர், இனிமேல் எங்கு வரப்போகிறுர் என்று எண்ணி ஏங்கவேண்டியிருக்கிறது. நாடக மேடையிலும், சினிமா திரையிலும் ஒளி வீசும் நட்சத்திரமாக அவர் திகழ்ந்த போதிலும், மக்களால் மிகுந்த அன்புடன், உரிமையுடன் போற்றப்படுபவராக அவர் இருந்தார். அவரிடம் மக்கள் எவ்வளவு பாசங் கொண்டு இருந்தார்கள் என்பதற்கு, அவர் நோய்வாய்ப் பட்ட காலை மருத்துவமனைக்கு முன் கூடியிருந்த மக்களின் பரிதாபப் பார்வையும், உடல் ஊர்வலமாக எடுத்துச் சென்ற அன்று உடன் திரண்டு சென்ற மக்களின் சோகமும், அனலிடை அவரது உடல் இடப்பட்டபொழுது அங்கு எழுந்த அழுகை யொலியும் வழிந்த கண்ணீரும் எடுத்துக் காட்டுக்களாகும். மக்களிடம் புகழ் பெற்ற நடிகராக மட்டுமல்ல, மக்களால் நேசிக்கப்பட்ட நண்பராகவும் அவர் இருந்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்களை மகிழ்ச்சிப் பெருங் கடலில் திளைக்க வைத்த அவர், அலையோசையற்ற அமைதியெனும் ஆழ்கடலில் மூழ்கி விட்டார். இனி அவர் மீண்டும் வரமாட்டார்.

பயன் தரும் கனிமரம் திடிரென இற்று வீழ்ந்ததென, ஊர் மக்களுக் கெல்லாம் நன்னீர் வழங்கிய ஊருணி திடிரென வரண்டு விட்டதென, கலைச் சோலையில் நல்ல கனிதரு மரமாக விளங்கிய அவர், நாடக உலகில் ஊருணியாக விளங்கிய அவர் திடிரென மறைந்தார். அவரை இழந்த திகைப்பிலிருந்து, வேதனையிலிருந்து மீளும் வழியறியாது தமிழர்கள் உளமழிந்துள்ளனர்.

நகைச்சுவையரசர் இறந்தார், ஆனல் அவர் எடுத்த வேலை, செய்த கலைப்பணி இன்னும் உள்ளது. அவருக்கு தமிழகம் நன்றி தெரிவிக்கக் கடப்பாடுடையது. நகைச் சுவை மன்னர் தந்த கலைச் செல்வம் பல இடங்களில், பல படங்களில் சிதறிக்கிடக்கிறது. அதைச் சேர்த்துக் கூட்டிவைக்கும் வாய்ப்பு கிடைத்தால், வருங்காலத்திற்கு அது நல்லதொரு கருவூலமாக அமையும். நூற்றுக்கு மேற்பட்ட படங்களில் அவரது நகைச் சுவைப் பகுதிகள் கலந்திருக்கிற காரணத்தால், சேர்த்தெடுப்பதும் பிரித்துத் தொகுப்பதும் மிகக் கடினமாகப்படலாம். சேகரிக்கப் பட்ட படங்களின் அளவு மிகுதியாக இருக்கும். சிரமும். தடைகளும் ஏராளமாக இருந்த போதிலும், அத்தகையதொரு முயற்சி வெற்றிபெற்ருல், தமிழ் நாட்டுக்கு நல் பேறு என்றே கூறவேண்டும்.

படங்களை ஒன்று சேர்த்து தொகுப்பது எக்காரணத்தைக் கொண்டும் இயலாத காரியமாகப் பட்டால், நகைச் சுவை மன்னர் நடித்த படங்களில் அவரது பாகங்களை விளக்கி, அவர் பேசிய பேச்சுக்களையும் பாட்டுக்களையும் தொடர்பு பிறழாமல் நூல் வடிவில் கொண்டு வரலாம். அந்தந்தப் படங்களில் இருந்த அவரது தோற்றங்களை இடையிடையே படங்களாகச் சேர்த்து வெளியிடலாம். நகைச் சுவை மன்னரின் கலைப்பணியும், அந்தக் கலையின் மூலம் அவர் பரப்பிய கருத்துச் சுவையும் அத்தகைய நூல் வடிவில், நமக்கும் வருங்காலத்துக்கும் எப்பொழுதும் கிடைப்பதாக அமையும். அந்த நூல் தொகுதியில், "கிந்தனர்" போன்ற காலட்சேபங்களின் முழக்கதையும், படங்களில் சேராது அவர் தனியாக நிகழ்த்திய வில்லுப்பாட்டுக்களும் இடம்பெறலாம். நடிகர் உலகில் சீரிய பணியாற்றிவரும் தென்னிந்திய நடிகர் சங்கத்தினர் இந்தப் பணியை மேற் கொண்டால், செம்மையாகவும் எளிதாகவும் செய்ய இயலும்.

நகைச்சுவை மன்னரின் சிலை ஒன்றை, சென்னை நகரில் ஒரு மையமாக விளங்கிடும் ஜலண்டுமைதானத்துக்கு அருகில் நிலைநாட்ட தென்னிந்திய நடிகர் சங்கம் முன்வந்திருப்பது போற்றத்தகுந்தது. நகைச்சுவை மன்னர் நடிகர்களுக்கு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும் மிக வேண்டியவராக இருந்த காரணத்தால், நடிகர்சங்கம் துவங்கியுள்ள முயற்சிக்கு பொதுமக்களின் சிறந்த ஆதரவும் இருக்கு மென எதிர்பார்க்கிறோம்.

நகைச்சுவை மன்னரின் பெயரால் கலைக்கூடங்களும் நாடக அரங்கங்களும், மருத்துவ மனைகளும் நிறுவவேண்டு மெனப் பல்வேறு கருத்துறைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் எந்தஅளவு செய்தாலும் அது மிகைப்படாது என்றே கூறவேண்டும்.

நகைச்சுவை மன்னருக்கு எடுப்பிக்கும் நினைவுச் சின்னங்களைவிட, அவர் பரப்பிய முற்போக்குக் கருத்துக்களுக்கு தகுந்த பாதுகாப்பும் வளர்ச்சியும் கலைத்துறையில் ஏற்ப ட வழிசெய்யவேண்டும். அதுவே அவருக்கும் அவரது புகழுக்கும் நாம் தரும் மதிப்பு ஆகும்.

நகைச்சுவை மன்னரின் பிரிவு, திராவிடமுன்னேற்றக் கழகத்தினராகிய நமக்கு ஆற்றவொண்ணு வேதனையாகும். அவர் நம் கழகத்துடன் சார்ந்து, நம்முள் ஒருவராக நம்மனோர் குடும்பங்களில் ஒரு உறுப்பினராக அவர் செயலாற்றிவந்தார். கலைத்துறையில் கழகப் பணி புரிய நேரிட்டபொழுதெல்லாம், கலைவாணர் அவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் முதன்மையாக இருந்தன. கைமாறு கருதாது, அதை ஒரு கடமையாக நினைத்து அவர் பணியாற்றினர். கழகம் எடுத்த பெரும் வேலைகளில் நிற்க வேண்டிய நேரத்திலெல்லாம் கலைவாணரின் பங்கு இருந்தது. தனக்கு ஏற்படும் நலிவுகளைக்கூடப் பொருட்படுத்தாமல், கழக வளர்ச்சியில் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார்! கடைசியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில், கழக உறுப்பினர்களை ஆதரித்து அவர் பிரசாரம் செய்தார். அவர் காட்டிய உணர்ச்சியும், ஆற்றிய பணியும், நம்மால் மறக்கமுடியாதன ! அவர் பிரிவு, நமது குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பு போலவே நமக்குப் படுகிறது! இந்தக் குடும்பத் துயரில், கலைவாணரைப் பிரிந்து துன்பத்திலாழ்ந்துள்ள மதுரம் அம்மையார் அவர்களுடனும், மற்றுமுள்ள கலைவாணரின் குடும்பத்தினருடனும், மக்களுடனும், உற்றார் உறவினருடனும் நாமும் சேர்ந்து ஆறுதல் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்!

**வாழ்க கலைவாணர் புகழ்!**

**வளர்க அவர் கலை!**

# டில்லியின் ஆடம்பரம்!

—(0)—

## 4 கோடி ரூபாயில் ஓட்டல், 1 கோடி ரூபாயில் நடனசாலை!

—(0)—

## ஏழைகளின் வரிப்பணத்தில் நடந்திடும் வாணவேடிக்கைகள்

—(0)—

உலகிலெல்லாம் பஞ்சசீலம் பாதிக்கக் காங்கிரசும் காங்கிர த்தலைவர்களும் முன்வந்துள் னர். ஆனால் அவர்கள் நாட் ல் பஞ்சத்தின் கோலம் பரவு தை அவர்கள் கவனிக்க றுக்கின்றனர்.

இந்தியா விடுதலை பெற்று த்தாண்டுகளாகிறது. பத் ாண்டு நிறைவின்போது, அர ாங்கம் விழாக் கொண்டாடி து. அரசாங்கம் கொண்டாடி து, ஆனால் மக்கள் மனதில் கிழ்ச்சியில்லை. அரசாங்கக் ட்டடங்களில் கொடிகள் தாங்கின, தோரணங்கள் அசைந்தன, வண்ண விளக்கு ள் ஒளிவிட்டன. ஆனால் மக் ளிடை வேதனையால் பல டைய முகங்கள் தொங்கின, ண்களில் ஏக்கம் இருந்தன, ல இல்லங்கள் இருண்டு கிடந் தன.

ஏழைகளின் இருண்ட ாழ்வு ஒளி பெறவில்லை. காங் ிரசின் பத்தாண்டு ஆட்சிக் ப்பின்னும் அந்த அவலநிலை ாறவில்லை, இன்னும் சொல் ப்போனால், நிலைமை முன்னை ிட மோசமாகியுள்ளது. ஏழை மலும் ஏழையாகியுள்ளான், ணக்காரன் மேலும் பணக் ாரனாகிவிட்டான். ஆக பணக் ாரனின் படாடோபம் ஒரு றம் அதிகமானது, மறுபுறம் ழையின் துயரம் அதிக ானது. ஏழைக்கும் பணக்கார ுக்குமிடையில் இருந்த வேற் றுமை அதிகரித்தது. "ஏழை ளின் வாழ்க்கைத் தரத்துக் ும் பணக்காரர்களின் வாழ்க் கைத் தரத்துக்கும் உள்ள வேறுபாடு, கடந்த ஒன்பது த்து ஆண்டுகளில் குறைவ ற்குப் பதிலாக அதிகமாகி ிருக்கிறது!" எனக் காங்கிர ின் பொதுக்காரியதரிசி சீமன் ாராயண் அவர்களே சால்லவேண்டிய நிலை பிறந் து.

காங்கிரசின் பத்தாண்டு ஆட் யில், மக்களின் ஏழ்மை அதி ரித்துள்ளது. வறுமைப்படு ுழியில் தள்ளப்பட்டவர்கள் தாகை அதிகமாயுள்ளது, ல்லாமை போதாமை குறை கள் மிகுதியாயுள்ளன, விலை வாசிகள் ஏறுகின்றன, வாழ்க் கைத்தரம் குறைகிறது, தொத் துநோய் பரவுகிறது, பஞ்சம் வருகிறது, பஞ்சைப் பராரி களின் தொகை-பகல்பட்டினி இராப்பட்டினி கிடப்போரின் தொகை-பஞ்சடைந்த கண்ணி னர் தொகை-பசையிழந்த வாழ் வினர் தொகை அதிகமாகிறது. வேலையின்றி, கூலியின்றி, வாழும் வகையின்றி, வாழ்வின் எல்லைக்குத் துரத்தியடிக்கப் பட்டு தற்கொலையில் தம் வாழ்வை முடித்துக்கொள் பவர்கள் தொகை அதிக மாகிறது!

காங்கிரசின் பத்தாண்டு ஆட் சிக் காலத்தில் நாடு மிகவும் நலிவடைந்துள்ளது. இதைஅர சாங்கமோ, காங்கிரசுத் தலைவர் களோ உணர்ந்ததாகத் தெரிய வில்லை. அரசாங்கத்தின் ஆடம்பரச் செலவுகளோ, வீண் வேடிக்கைகளோ குறைந்ததா கத் தெரியவில்லை. மக்களிட மிருந்து எடுத்துச் செல்லும் வரிப்பணத்தை வைத்துக் கொண்டு, மத்திய அரசாங்கத் தினர் அவசிய மற்ற விதங் களில், வீண் ஆடம்பரங்களில் செலவிடுகின்றனர். இவ்வளவு ஆடம்பரச் செலவுகள் ஏழை கள் நாட்டுக்குத் தேவைதானா?

2-3-57 "டைம்ஸ் ஆப் இந் தியா" பத்திரிக்கையில் ஆசிரி யருக்குக் கடிதம் என்ற பகுதி யில் டில்லி அரசாங்கம் செய் யும் வீண் செலவுகளைப்பற்றி ஒருவர் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ளதின் மொழி பெயர்ப்பு கீழே தரப்படுகிறது.

"காந்திஜி நம்முடன் இன் னும் இருக்கிறார் எனத் திவாகர் போன்றவர்கள் பேசுகிறார்கள். அவர் பேசு கிறபடி இருந்தால் நல்லது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, அவரிடமிருந்து வெகுதூரத் தில் நாம் இருக்கிறோம். கிரா மங்களில் வாழ்பவர்களைப் பற்றி காந்தியடிகள் மிகவும் அக்கரை காட்டினார். கிரா மத்திலிருப்பவர்கள் இப் பொழுது அடிக்கடி பட்டினி கிடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். முன் எப் படி பஞ்சத்தால் பாதிக்கப் பட்டிருந்தார்களோ, அப் படியே இப்பொழுதும் இருக் கிறார்கள். மைசூர் மாநிலத் தில் ஒருகிராமத்தில் சில ஏழைகள் உண்ண உணவில் லாமல், ஏதோ கிழங்குகளைச் சாப்பிட்டு, அந்தக் கிழங்கு களில் நஞ்சு இருந்த கார ணத்தால் மாண்டார்கள் என்ற செய்தி வந்தது. கிரா மப்புறங்களில் நல்ல குடி தண்ணீர் கிடையாது. ஆத லால் இந்த நேரத்திலும், ஆயிரக்கணக்கில் காலரா வால் பாதிக்கப்பட்டு, பூச்சி கள் விழுவதைப்போல, வீழ்ந்து மடிகின்றார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் டில்லியில் இருந்த ஓட்டல்கள் இப் பொழுதும் இருக்கின்றன. அப்பொழுது இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டு விருந்தி னர்கள் அந்த ஓட்டல்களில் தங்கியதைப்போல, இப் பொழுதும் வருகிற வெளி நாட்டார்கள் தங்கலாம்.

ஆனால் 4 கோடி ரூபாய் செலவில் ஒரு ஓட்டலை நமது மத்திய அரசாங்கம் டில்லி யில் கட்டி வருகிறார்கள். கிராமங்களில் குடிக்கக் கூடச் சரியாகத் தண்ணீர் கிடைக் கவில்லை. அவர்களைத் தவிக்கவிட்டு, அவர்களிட மிருந்து வாங்கும் வரிப் பணத்தில் 4 கோடி ரூபாய் ஓட்டல் கட்டப்படுகிறது. இந்த ஓட்டலில் ஒரு நீச்சல் ஓடை இருக்கப்போகிறது. 3 லட்சம் காலன் தண்ணீர் தேங்கும் அளவுக்கு அந்த உல்லாச நீச்சல் ஓடை இருக் கும். அதில் இருக்கும் தண் ணீர் எப்பொழுதும் தூய்மை யாகவும் பரிமளமுடையதாக வும் வைக்க இயந்திர சாத னங்கள் இருக்கும்......

மேலும், ஒரு கோடி ரூபா யில் நடன—நாடக மண்டபம் ஒன்று டில்லியில் அரசாங் கத்தினரால் கட்டப்படப் போகிறது. மக்கள் வாழ்ந் தால்தானே அவர்களுக்கு நாட்டியமாடிக் காட்டமுடி யும்!"

இவ்வாறு மத்திய அரசாங் கத்தினர் செய்யும் ஊதாரிச் செலவுகளைப் பற்றிய குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

ஏழைகள்நாடு இது; உண்ண உணவுகிடைக்காமல் கற்றாழை யையும் காட்டுக்கிழங்குகளையும் தின்று மக்கள் வாழவேண்டி யிருக்கிறது, அல்லது மடிய வேண்டியிருக்கிறது. இருக்கு மிடங்களோ மாடு ஆடு இருக் கக்கூடத் தகுதியற்ற குடிசை கள்! அத்தகையப் பதுங்கு மிடங்கள்கூட இல்லாமல், வய லோரத்திலும், மரத்தடியிலும், கையைத் தலையணையாக்கி உறங்க முயல்பவர்கள் கிராமத் தில் அதிகம்! இவ்வாறு ஏழ்மை மலிந்த நாட்டில், அர சாங்கம் 4 கோடி ரூபாயில் ஒரு ஓட்டலைக் கட்டுகிறது.

நாட்டு மக்கள் கூரை பிரிந்த குடிசைகளில் வாழ்கின்றனர், குளிரிலும் மழையிலும் வதை படுகின்றனர். அங்கு வெளி நாட்டாரை வரவேற்க, உபச ரிக்க 4 கோடி ரூபாயில் உல் லாச விடுதி! இது "தரித்திர நாராயணன்களுக்காகப்" பாடு படக் கிளம்பிய அண்ணல் காந்தியின் சீடர்கள் நடத்தும் ஆட்சியில்!

கற்றாழைக் கிழங்கைத் தின்று மக்கள் ஒருபுறம் மடி கின்றனர். அங்கு சலவைக் கற்களால் விருந்து மண்டபம் கட்டப்படுகிறது, பளிங்குத் தளம் போட்ட நீச்சல் குளம் தயாராகிறது!

வறுமையால் கொட்டப் பட்டு, மக்கள் புழுப்போலத் துடிக்கின்றனர். அங்கு, டில்லி பட்டணத்தில், நடனமாடவும் நாட்டியம் காணவும் ஒரு கோடி ரூபாயில் ஒரு மண்டபம்!

வரிகொடுக்கிற மக்கள் வாடுகின்றனர், வாங்கிக் குவிக் கிற டில்லிதர்பார் வாண வேடிக்கை நடத்துகிறது.

வெளிநாட்டாரை வர வழைக்க, வரவேற்க, உப சரிக்க, இருக்கச்செய்ய இதுவ ரைப் பயன்பட்டுவந்த ஓட்டல் கள் போதாவா? அப்படியே தேவையென்றாலும், அந்த உல்லாச மாளிகையைவிட மிக அவசியமான பல நாட்டில் செய்யப்பட வேண்டியிருக்கின் றனவே! அதைவிட்டு, நான்கு கோடி ரூபாயில் ஒரு ஓட்டலும் ஒருகோடி ரூபாயில் நாடக மண்டபமும் தேவைதானா? ஆடம்பரச் செலவுகளுக்கு மக் களின் வாழ்வு பலியிடப்படு கிறதே!

ரோம் நகரம் பற்றியெரியும் பொழுது, நீரோ மன்னன் யாழ் வாசித்தான்! இன்று நாட்டி னர் உள்ளம் பற்றி எரிகிறது; ஆளவந்தார்கள் உல்லாசம் பாடுகிறார்கள்! அன்று நீரோ மன்னர் ஆட்சி! இன்று நேரு வர்க்கத்தினர் ஆட்சி! O

# தெற்கை வடக்கு புறக்கணிக்கிறது!

## "விகடன்" குமுறுகிறது! "கல்கி" எச்சரிக்கிறது!

[வடநாட்டார் தென்னாட்டையும், தென்னாட்டினரையும் எல்லா வகையிலும் புறக்கணிக்கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் குறிப்பிடும்போதெல்லாம் அறியாக் காங்கிரசுக்காரர்கள் பலரும் ஆத்திரம் அடைகின்றனர்! நம்மைத் தூற்றுகின்றனர்; ஏசுகின்றனர்; அப்படி ஒன்றும் இல்லை என்று பேசுகின்றனர். நாம் கூறும் கருத்து எவ்வளவுக்கெவ்வளவு முழு உண்மை என்பதைக் காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகளான 'ஆனந்தவிகடனு'ம், 'கல்கி'யும் தம் 1-9-57 இதழ்களில் தெள்ளத்தெளியப் புலப்படுத்தியிருக்கின்றன. நேர்மையும் நாணயமும் பெற்றுச் சிந்திக்கும் பண்பை இழக்காத காங்கிரசுக்காரர்களுக்குத் தெளிவுபயக்கட்டும் என்று கருதி அவை தரும் சில குறிப்புக்களைக் கீழே தருகிறோம்.]

—(ஆ-ர்)

## நெஞ்சு பொறுக்குதில்லையே!

(இந்திய சர்க்கார்) "நாம் எண்ணும் தலைவர்களை மறந்துவிட்டார்கள். தென்னாட்டைப் புறக்கணித்துவிட்டார்கள். கன்னித்தமிழையும், கனிதெலுங்கையும், கட்டிக் கரும்பு போன்ற கன்னடத்தையும், அன்று மலையாளத்தையும் மறந்துவிட்டார்கள். மகாராஷ்டிரத்துக்குத் தெற்கே மனிதர்களே இல்லை என்று எண்ணிவிட்டார்கள்."

* * *

1857-ம் வருஷம் சிப்பாய்க் கலகத்தில் ஆரம்பித்த சுதந்திரப்போரின் நூறாண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில் நமது செய்திப்பட இலாகா "சுதந்திர யாத்திரை" என்று ஒரு அருமையான படத்தை வெளியிட்டார்கள். அதைத் தென்னாட்டு மக்கள் பலர் ஆவலுடன் பார்த்தார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் முதல் முழக்கம் செய்த வீரத்தமிழன் கட்டபொம்மனுக்கு அரசாங்கம் விழா எடுக்கவில்லை; அவனுக்குத் தக்க ஞாபகச்சின்னம் அமைக்கவில்லை; அவன் திருவுருவத்தைக்கூட தபால் தலையில் போட்டவில்லை என்ற குறை தமிழ் நாட்டில் நெடுநாளாக இருந்து வருகிறது.

அவன் இருநூறு வருஷங்களுக்கு முன்பு இருந்த வீரன், நாங்கள் இந்த நூறுவருஷத்துக்குள் வாழ்ந்த வீரர்களைத்தான் கௌரவிப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இந்த நூற்றாண்டைச் சேர்ந்த தென்னாட்டுத் தேசிய திலகங்களையும் இந்தப் படத்தில் சேர்க்க மறந்து விட்டார்கள், இதை நினைத்தால் நமது நெஞ்சு பொறுக்கவில்லை.

"1883ம் வருஷத்தில் இந்திய மக்களைத் தட்டிஎழுப்பி காங்கிரசை ஆரம்பிக்கச் செய்த ஆங்கிலேயர் ஹ்யூம் துரை அதில் இருக்கிறார். ஆனால், முதல் காங்கிரசின் முதல் தீர்மானத்தைக் கொணடுவந்த தமிழ்மகன் ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர் அதில் இல்லை.

"சுதந்திரப் போரின் படத்தில் விவேகானந்தர் இருக்கிறார். ஆனால் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பிய வீரத் தமிழர்கள் யாருமே அந்தப் படத்தில் இடம் பெறவில்லை."

"செக்கிழுத்த சிதம்பரனார் வருவார், தேசத்துப் போருக்குத் திருவிளக்கேற்றிய தீரர் வருவார், கப்பலோட்டிய தமிழனின் திரு உருவம் திரையில் காட்டப்படும், கரம் குவிப்போம் எனக் காத்திருந்தான். ஆனால் அருமைச் சிதம்பரனார் படம் அதில் இல்லை; தமிழர் சிந்தையில் உள்ள சிதம்பரனாரை சுதந்திர யாத்திரையில் சேர்க்கவில்லை என்பதைக் கண்டதும் காரம் குவிக்க எழுந்த கைகளால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் விகடன்.

"ஏன் இந்த வேற்றுமை? ஏன் இந்தத் தவறுதல்? என்று எண்ணும்போதே லோக மான்ய பால கங்காதர திலகர் வந்தார்; பிரோஷா மேத்தா வந்தார்; தாதா பாய் நவரோஜி வந்தார்......ஆனால் சிவாவும், பாரதியும் அங்கு வரவில்லை.

"......மகாகவி பாரதிக்கு அந்தப் படத்தில் இடமில்லை என்பது தமிழ் நாட்டுக்கு அவமானம்; தென்னகத்திற்கு அநீதி; பாரதத்துக்கே ஒரு இழுக்கு என்று மனம் குமுறியது.

"சரி, வேண்டியவர்களை இரண்டாம் பத்தியில் வைப்பதுபோல் பிற்பகுதியிலாவது நம் தலைவர்கள் வரலாம் என்று காத்திருந்தான்.

"அடுத்த பகுதியும் வந்தது. மாபெரும் தலைவர்கள் படமெல்லாம் வந்தன. அண்ணல் காந்தி வந்தார். மனிதகுல மாணிக்கம் நேருவைக் கண்டோம். மன்னர்களை ஜயித்த வல்லபாயைப் பார்த்தோம். அறிஞர்கள் போற்றும் ஆசாதைக் கண்டோம். ஜனாதிபதி ராஜேந்திர பிரசாதைப் பார்த்தோம். ஜெய் ஹிந்த் முழக்கிய நேதாஜியையும் கண்டு மெய் சிலிர்த்தோம். ஆனால் ...... ஆனால்...எழுதவே கை நடுங்குகின்றது. எண்ணினால் இரத்தம் கொதிக்கின்றது.

"...நமது அருமை ராஜாஜியை அந்தப் படத்தில் காணோம்!

"...தீரர் சத்திய மூர்த்தியை அதில் காணோம்

"...ஆந்திர கேசரி பிரகாசம் காருவை அதில் காணோம். ஆம், அந்தப் படத்திலே தேசிய சுதந்திரத்துக்காகப் போராடிய தென்னிந்தியர்கள் யாருமே இல்லை.

"தென்னாட்டவர்களின் சேவை மற்றவர்களை விடக் குறைந்துவிட்டதா? மதிக்கத் தக்க அளவு தென்னாடு தியாகம் செய்ய வில்லையா? கொடிக்காக உயிர் விட்ட குமரன் தமிழனகப் பிறந்தது தவறா? அல்லது செய்திப் பட இலாகாவின் தலைவருக்குத்தான் தேசத்தின் சரித்திரம் தெரியாதா? இல்லையேல், இந்தப் படத்தை வெளியிட அனுமதித்த கமிட்டி மெம்பர்கள் அத்தனை பேரும் ஒரு தலைப் பட்சமான மனப்பான்மை உடையவர்களா?

"...காரணம் எதுவாக இருந்தாலும் தவறு தவறுதான். இந்த மாபெரும் தவறுக்கு அரசாங்கம் தென்னாட்டவர்க்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இந்தஅநீதி துடைக்கப்பட வேண்டும், படத்தை உடனே வாபசு பெறவேண்டும்.

"மானம் பெரிதாக மதிக்கும் தமிழ் நாட்டின் பிரதிநிதிகள் பலர் டில்லியில் இருக்கிறார்கள். தேர்தலின் போது தமிழ் நாட்டு மக்கள் சிரித்த முகத்துடன் ஓட்டளித்த காட்சியை அவர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. இன்று அவர்கள் இங்கு வந்து பார்ப்பார்களானால் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் பொங்கும் உணர்ச்சியைத் தெரிந்து கொள்வார்கள், தென்னிந்தியாவுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப் பெருந்தவறை நீக்க அவர்கள் முன் வருவார்கள், பழியைத் துடைப்பார்கள் என்று ஒவ்வொரு தென்னிந்தியனும் எதிர்பார்க்கிறான்"

—"ஆனந்த விகடன்"-1-9-57.

## நஷ்டம் நமதல்ல!

"பாரத சர்க்கார் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி எடுத்துள்ள செய்திப் படத்தைப் பற்றி நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன... பாரத நாட்டுச் சுதந்திரப் போராட்டத்திலே கலந்துகொண்டு, வெள்ளைக் கும்பினிக் காரர்களைக் கலங்க அடித்த வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றவர்களைப் பற்றி அந்தச் செய்திப் படத்தில் ஒரு குறிப்புகூடக் காணவில்லை. இவர்களைப்பற்றித்தான் ஒன்றுமில்லை என்றாலும் காந்தி யுகத்திலே அகிம்சைப் போரில் காந்தி மகானுடன் தோளோடு தோள் சேர்த்து நின்று பாரத அன்னையின் விடுதலைக்கு மகத்தான தியாகங்கள் புரிந்த தென்னாட்டுத் தலைவர்களையாவது குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா? அவர்களில் ஒருவரையுமே காண்பிக்கவில்லை.

"நமது அருமைத் தலைவர் ராஜாஜியின் மகத்தான சேவையை உலகமே போற்றுகிறது... அந்தநாட்களையெல்லாம் பாரத சர்க்கார் மறந்திருப்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது!

"தீரர் சத்தியமூர்த்தி சட்டசபைகளிலும் பலப்பல பொது மேடைகளிலும் ஏறிநின்று தேசத்தை வீறுகொண்டு எழச்செய்த காட்சியை இன்னும் நம்மக்கள் மறந்துவிடவில்லை. ஆந்திர கேசரியின் தீரம் மிகுந்த செயல்களை மக்கள் கதைகதையாகப் பேசுகின்றனர். வ. வே. சு. ஐயர், பாரதியார், வ. உ. சி. இப்படி எத்தனையோ தேச பக்தர்கள் இல்லையா? இவர்களில் ஒருவரைக்கூட நமது பாரத சர்க்கார் எடுத்துள்ள செய்திப் படத்தில் காண்பிக்கவில்லை. இது தென்னாட்டு மக்களின் உணர்ச்சியைத் தொட்டிருக்கிறது. இந்தச் செய்கை தமிழ் மக்களை எவ்வளவு ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கின்றது என்பது நமக்கு வரும் கடிதங்கள் காண்பிக்கின்றன."

"சில ஆண்டுகளுக்குமுன் பாரத சர்க்கார் வெளியிட்ட தபால் பில்லைகளில், தமிழ் நாட்டுக்கவிஞர், கலைஞர் யாரையும் சேர்க்காமல் வடநாட்டுக் கவிஞர்களாகவே வெளியிட்டது பெரும் கிளர்ச்சியை உண்டுபண்ணியது. இப்பொழுது இந்தச் செய்திப்படம் பெரும் கிளர்ச்சியையும், வருத்தத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது."

"பாரத சர்க்கார் அடிக்கடி இமய முதல் குமரி வரை ஒரே தேசம் என்று சொல்லி வருகிறார்கள். நாம் எல்லோரும் இந்தியர்கள் என்கிறார்கள். ஆனால், இந்தச் சுதந்திரப்போராட்டத்தைப் பற்றிய செய்திப் படத்தில் சுதந்திரத்துக்காக உடல், பொருள் ஆவி அத்தனையும் அர்ப்பணம் செய்த உத்தமத் தென்னாட்டுத் தலைவர்களை அடியோடு மூடி மறைத்து விட்டார்கள்"

* * *

"பாரத சர்க்கார் இப்படித் தென்னாட்டு மக்களின் உள்ளங்களை நோகும்படி காரியம் செய்து கொண்டே போனால் முடிவில், எதில் கொண்டு போய்விடும் என்று நாம் சொல்லத் தயாராயில்லை. இதனால் கஷ்டமும் அடையப் போகிறவர்கள் பாரத சர்க்காரே ஒழியத் தென்னாட்டவர்கள் அல்ல! இதைச் சொல்ல வேண்டியது நமது கடமை என்றே சொல்கிறோம்."

—கல்கி"—1-9-'57.

ஓரங்க நாடகம்:—(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



# தண்டனை

**இரா. செழியன்**

(செடி மறைவிலிருந்து கவிஞன் கதிர்ச்செல்வன் வெளிவருகிறன். அரசி வீரமாதேவி அவனைக் கண்டிப்புடன் பார்க்கிருள்.)

**அரசி:** நீ யார்?

**கவிஞன்:** நான்தான் கவிஞன் கதிர்ச்செல்வன், சதிகாரன் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அனுபபபபட்டவன்!

**அரசி:** இங்கு எப்படி வந்தாய்?

**கவி:** போர் வீரர்களிடமிருந்து தப்பி ஓடிவநதேன். நல்ல வேளையாக மறைந்த இடத்திறகருகில் அரசியைப் பாரககமுடிந்தது. சதிகாரன் ஒருவனை நேரில், தனிமையாகப பார்க்க உங்களுக்கு அச்சமாக இல்லையா?

**அரசி:** நான எதற்காக அஞ்ச வேணடும். உன்னைப் போனறு ஆயிரக்கணக்கான வர்கள் சூழ்ந்த போர்க்களங்களைப பார்த்திருக்கிறேன். அபபொழுது அஞ்சாத நான், தனியாக வந்து நிற்கும் உனக்காக ஏன் அஞ்ச வேண்டும?

**கவி:** என்னைப்பற்றிய பயம் இல்லையென்ருல், சதிகாரன் என்று ஏன சிரச்சேதம் செயய வேண்டும்?

**அரசி:** எனக்காக அந்தத்தண்டனையை நான் தரவில்லை. நாட்டுக்காகச் செய்தேன்!

**கவி:** உங்களுக்காகவே சிலவற்றை நீங்கள் செய்து கொளள வேண்டும்.

**அரசி:** அது எனக்குத்தெரியும்!

**கவி:** உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஆனல் மற்றவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்துவிட்டு, தனக்கு வேண்டியதைப்பற்றி மறந்து விடக்கூடும்.

**அரசி:** என் கவலைகளைப்பற்றி சதிகாரன ஒருவன் கவலைப் படத் தேவையில்லை!

**கவி:** என்னை ஏன் சதிகாரன் என்று முடிவுகட்டவேண்டும்!

**அரசி:** சதிகாரன் இல்லையென்ருல் அரண்மனையைச்சுற்றிச் சுற்றி ஏன் வரவேண்டும்? அரசியைச் சிறைசெய்ய வேண்டுமெனத் திட்டங்கள் ஏன் எழுத வேண்டும்? கடைசி நேரத்தில், காவல் தலைவரின் திறமையால் நீ பிடிபடாது போனல், இந்த நாட்டுக்குப் பேராபத்து உண்டாகியிருக்கும்.

**கவி:** என்னைப்பார்த்தால் சதிகாரனகத் தோன்றுகிறதா?

**அரசி:** ஒருவனைப்பார்த்து அவனுடைய செயல்களை அனுமானிப்பதில்லை, அவனுடைய செயல்களைக் கொண்டுதான் அவனைப் பற்றி முடிவு கூறவேண்டும்.

**கவி:** சதிச்செயல்கள் அரசாங்கப் பிரபுக்களுக்கும் அரசபரம்பரையினருக்குமே உரித்தான சொத்துக்கள். நான் அரசாங்கத்துக்கு அப்பாற்பட்டவன். கவிஞனுடைய உலகில் சதித்திட்டங்களுக்கு இடம் கிடையாது. அவனுடைய அரசு சதிச்செயல்களால் வீழக்கூடிய அளவு அவ்வளவு பலவீனமானதல்ல. படைகள் அவனுடைய அரசின்மீது படையெடுக்க முடியாது. போர்களால் அவனுடைய அமைதியைக்குலைத்துவிட முடியாது. அவன் தனிமையாக இருக்கிறன். ஆனல் பெரும்படைகளை அவனல் எதிர்த்து நிற்க முடியும். கனவில்கூட ஆபத்துக்களை நினைத்தபடி அரசன் இருப்பான். ஆபத்துக்கள் சூழ்ந்த நேரத்தில் கூட கவிஞன் கனவுகண்டபடி இருப்பான். அரசனுடைய வாழ்வைவிடக் கவிஞனுடைய வாழ்வு எவ்வளவோ நிம்மதியானது! அரசனக இருப்பதைவிடக் கவிஞனக இருப்பதுமேல்!

**அரசி:** சதிகாரனக இருப்பதைவிட சாவதேமேல்!

**கவி:** அரசியாருக்கு என் மேலிருந்த ஐயம் நீங்கியபாடில்லை. சரி! என் ஓலைச் சுவடியில் இருக்கிற பாட்டுக்கள் எபபடியிருந்தன!

**அரசி:** பாட்டுக்கள் நன்ருக இருந்தன. ஆனல் அதறகாக உனக்கு மன்னிப்புக் கிடைத்து விடுமென்று நினைக்காதே! கண்ணைக் குத்த வந்த கூர்முள், ஒரு கவிஞனுடைய எழுத்தாணி என்பதற்காக யாரும் குருடாக மாற ஒப்புக்கொள்ள மாட்டார்கள்! கவிதையில் சதித்திட்டங்களை எழுதிவிடுவதால், அவைகளுக்கு அனுமதி கிடைத்து விடுமென்று எண்ணதே!

**கவி:** அரசியாரே! என் கவிதைகளின் மீது பெருத்த அவமானத்தைச் சுமத்தப் பார்க்கிறீர்கள்! என்னைக் குற்றஞ்சாட்டுங்கள், எனக்குத் தண்டனை தாருங்கள், ஆனல் அந்தக் கவிதைகள் குற்றமற்றவை, தூய்மையின் படைப்புகள்! குற்றங்கள் நிறைந்த, சூதுவாது நிரம்பிய, உலகில் நான் இருக்கிறேன். அதற்காக எனக்குப் பழியும் தண்டனையும் தரப்பட்டாலும், அந்த கவிதைகள், குற்றமற்றவைகள், இந்த உலகத்து நச்சுக் காற்றை அறியா தூய உலகில்மலர்ந்த அழகு மலர்கள்! என்னை விட்டுத் தள்ளுங்கள், என்னுடைய கவிதைகள் எப்படியிருந்தன?

**அரசி:** முதலில் கூறினேனே, அந்தக் கவிதைகள் நன்ருக இருந்தன!

**கவி:** உங்களுடைய மதிப்புரை, காகித மலர் போலல்லவா இருக்கிறது. எதைப் பார்த்தாலும், நன்ருக இருக்கிறது என்று கூறிவிடலாம்! இங்கே அமைக்கப்பட்ட மேடை அதோ நிற்கிற கம்பம், தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள தண்ணீர்த் தொட்டி எல்லாம் நன்ருகத் தானிருக்கின்றன. அதேபோல், இந்தக் கவிதைகளையும் பார்த்து நன்ருக இருக்கின்றது என்ருல், நீங்கள் கவிதைகளைப் படிக்கவில்லை, ஏதோ சொற்கள் அடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தது போலிருக்கிறது. இன்னும் விளக்கமாக உண்மையாக உங்கள் கருத்துரை இருக்க வேணடும்!

**அரசி:** அழகாக இருந்தது!

**கவி:** அவ்வளவு தான?

**அரசி:** இனிமையாக இருந்தது!

**கவி:** செவிக்கு மட்டுந்தான?

**அரசி:** இல்லை, உள்ளத்துக்கும் இன்பமாக இருந்தது!

**கவி:** எங்கிருந்து கவிதைகளைப் படித்தீர்கள்?

**அரசி:** எங்கிருந்தா? இந்தத் தோட்டத்தில் தான்! இல்லை அந்த நிலா முற்றத்தில்! இல்லையில்லை, இன்றைக்கு அந்தப்பக்கம் நான்போகவே இல்லையே! வசந்த மண்டபத்திலிருந்தா, அல்லது நீரோடையின் பக்கத்திலா, (குழப்பத்துடன் தாமதித்து) எங்கு என்று எனக்கு ஞாபகமில்லை!

**கவி:** ஒரு கவிதையைப் படிக்கும் பொழுது மலர்ப்பொழிலில் இருப்பது போலிருக்கும், மற்ருெரு கவிதை மலையோரத்துக்கு அழைத்துச் செல்லும், ஒரு கவிதை வசந்த மண்டபத்தில் அமரச் செய்யும், பிறிதொரு கவிதை நிலவுவெளியில் உலவச் செய்யும்! கவிதைகளைப் படிக்கும் பொழுது அந்தந்த இடங்களிலெல்லாம் இருந்திருக்க வேண்டும்! அப்படித் தானே அரசியாரே!

**அரசி:** பாட்டுக்களை எழுதிய உனக்கு அவைகளைப் பற்றி நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும்! நீ கூறுவது உண்மை தான்!

**கவி:** உண்மையென்னவென்ருல், அந்த இடங்களில்தான் நான் அந்தக் கவிதைகளைத் தீட்டினேன்! மலைச்சாரலில், அருவி ஓரத்தில், பனித்துளி தெரித்த பசும்புல் தரையில், தாமரை விரித்த தண்ணரும் பொய்கையில், தென்றல் சிலிர்த்திடும் தேன் மலர்ச் சோலைகளில், நிலவு வழிந்திடும் மலர்ப்பூம் பொழில்களில், எங்கெங்கு இருந்தேனே அங்கிருந்தெல்லாம் இந்தக் கவிதைகளைத் தீட்டினேன், என்காதலிக்கு!

**அரசி:** காதலிக்கா?

**கவி:** ஆமாம்! காதற்கவிதைகளை வேறுயாருக்குத் தீட்ட முடியும்? என் காதலை நினைத்து, என் காதலியை நினைத்து பாடிய பாட்டுகள் அவை!

**அரசி:** பாவம்! மிகப் பரிதாபமானதுதான்! உனக்காக அல்லாவிட்டாலும், உன் காதலிக்காகவாவது உன்னை மன்னிக்க வேண்டும்? உன் காதலியை விட்டு, உன் நாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு ஏன் வந்தாய்?

**கவி:** என் காதலியைத் தேடித்தான்!

**அரசி:** உன் காதலி இந்த நாட்டிலிருக்கிருளா?

**கவி,** ஆமாம்! இந்த நாட்டைச் சேர்ந்தவள!

**அரசி:** இந்த நாட்டைச் சேர்ந்தவளா? எந்த ஊரிலிருக்கிருள்?

**கவி:** இந்த ஊரில்தான்!

**அரசி:** இந்த ஊரில்தான? எந்தத் தெருவில்?

**கவி:** இதே, அரண்மனையில் தான்!

**அரசி:** வேடிக்கையாக இருக்கிறதே! இப்பொழுது எனக்கும் புரிகிறது. அரண்மனையைச் சுற்றிச் சுற்றிவந்து பார்த்துக்கொண்டிருந்ததற்கு அதுதான் காரணம்; நீ ஒரு நல்ல கவிஞன்; ஆனல் காதலன் அல்ல!

**கவி:** ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

**அரசி:** நேராக என்னிடம் வந்து உன் காதலியைப் பற்றித் தெரிவித்திருந்தால், நான் தடுத்திருக்கமாட்டேன்! அல்லது அவளிடமாவது சொல்லி என்னிடம் தெரிவித்திருக்கலாம்!

**கவி:** அவளை இன்றைக்குத் தான் சந்திக்க முடிந்தது!

**அரசி:** யார் உன் காதலி?

**கவி:** நான் சொன்னால் அவளுக்கு உங்களால் ஆபத்து ஒன்றும் இருக்காதே!

**அரசி:** நிச்சயம் இருக்காது! அவளை உனக்குத் தர நான் எனது அனுமதியைத் தயங்காமல் தருவேன்!

**கவி:** கொடுக்கக் கூடியதை விட அதிகமான அளவுக்கு வாக்குறுதி தந்துவிடாதீர்கள்!

**அரசி:** சற்றுமுன் என்தோழி, என்னை ஒரு அரசியாக மட்டுமல்ல, ஒரு பெண்ணாகவும் இருக்கச் சொன்னாள்! இன்றிரவு நான் அரசிமட்டுமல்ல, ஒருபெண்கூட! உங்கள் காதலை நான் மிக ஆதரவுடன் பாதுகாப்பேன். அது ஈடேறுவதற்கான உதவிகளைச் தருவேன்!

**கவி:** பெயர் தெரிந்ததும், என்னைக் காதலிக்கக்கூடாது என்று அந்தப் பெண்ணுக்கு தடை விதிக்கமாட்டீர்களே!

**அரசி:** [illegible]? நான் என் [illegible] கடுமையான தண்டனை விதிக்கப் போகிறேன்! [illegible] த்தால் கூட என்ன [illegible] ந்து விடும்? கவிஞன் [illegible] ஏதேதோ கற்பனை செய்ய முடிகிறதே யன்றி ஒரு பெண் மனத்தை [illegible] ந்துகொள்ள உம்மால் முடியவில்லையே! ஒரு பெண் காதலிக்க ஆரம்பித்து விட்டால், உலகிலுள்ள [illegible] பலமும் அவளுக்குத் தடைவிதிக்க முடியாது! [illegible] லால் அஞ்சாமல் சொல், யாராயிருந்தாலும் அஞ்சத் தேவையில்லை! சீமானின் வீட்டுப்பெண் [illegible], உன்னையும் ஒரு சீமானா [illegible] ஆக்குகிறேன். பிரபு வீட்டுப் பெண் என்றால் [illegible] ஒரு பிரபுவாக [illegible]! அவள் யாராயிருந்தாலும், அவள் உன்னுடன் இன்பமாக இருப்பாள்!

**கவி:** ஏன்?

**அரசி:** பெண்கள் மனம் உனக்குத் தெரியாது. அவர்கள் பெரும்பாலும் கற்பனையிலும் கனவிலும் வாழ்பவர்கள்! உன்னைப் போன்ற கவிஞன் மணாளனாக வந்தால், அவளுடைய கனவும் கற்பனையும் நிறைவு பெற்றுவிடும்! நேரமாகிவிட்டது, நான் போக வேண்டும்! யார் அந்தப் பெண்? சீக்கிரம் சொல்!

**கவி:** [illegible] யாருக்குக் கோபம் வருமோ என்று அஞ்சுகிறேன்!

**அரசி:** அஞ்சவேண்டாம்!, (வேடிக்கையாக) உன் கவிதைகளுக்கு உரிய காதல் தேவதை யார்?

**கவி:** நீங்கள்தான்!

**அரசி:** (கடுமையாகத் திரும்பிப் பார்த்து) என்ன? அரசியைப் பார்த்து என்ன சொன்னாய்?

**கவி:** அரசியைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வில்லை. நான் காதலிப்பதாகச்சொல்லியது அரசியை அல்ல!

**அரசி:** (சிறிது தணிந்து) பின் யாரை?

**கவி:** என் எதிரே நிற்கும் பெண்ணை அரசியே! மறந்துவிடாதீர்கள் நீங்களும் ஒருபெண் என்பதை! சற்று முன் கூறினீர்கள், 'இப்பொழுது நான் அரசியல்ல, ஒரு பெண்! அஞ்சாமல் நீ சொல்லவேண்டியதைச் சொல்!' என்று! அந்தப் பெண்ணிடம் நான் ஒன்றிரண்டு கூற விரும்புகிறேன், அந்தப்பெண் மூலம் அரசிக்கு சில கூற விரும்புகிறேன்! அரசியே! அரியணை மீது நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள், அதற்காக உங்கள் இதயத்தை அழுத்தி, அதன் மீதிருந்து அரசாள முயலாதீர்கள்! அரசாட்சி மிஞ்சும், இதயம் அழுந்திப்போய்விடும்! இதயத்தைத் தண்டித்து இரக்கமற்ற தன்மையை கொலு மண்டபத்தில் வைக்கப் போகிறீர்களா? இதயத்தைச் சிறையில் பூட்டி, உல்லாசமாக உங்களால் வாழ முடியுமா? கொலுமண்டபத்தில் உங்களைப் பார்க்காமல், படை வரிசையில் உங்களைச் சந்திக்காமல், இந்தத் தோட்டத்தில், இந்த நிலவில்பார்த்துச்சொல்கிறேன், மறந்துவிடவேண்டாம் நீங்கள் ஒரு அரசி மட்டுமல்ல ஒரு பெண்கூட என்பதை!

**அரசி:** நீ யார், என்னைப்பற்றிப் பேச! என் முன் நில்லாதே, ஓடிப்போ!

**கவி:** என்னை ஓடிப்போகச் சொல்கிறீர்கள், உண்மையில் உங்களைவிட்டு ஓடிப்போக நீங்கள் முயல்கிறீர்கள்!

**அரசி:** நான் எந்த இடத்தில் இருக்கவேண்டுமோ அந்த இடத்தில் இருக்கிறேன். நான் எப்பொழுதும் ஓடியதில்லை! சீக்கிரத்தில் ஓடிப்போ, இங்கு நில்லாதே!

**கவி:** நான் நிற்க வேண்டிய இடத்தில் நானும் நிற்கிறேன்! நான் மட்டும் ஏன் ஓடிப்போக வேண்டும்? அதிருக்கட்டும், சதிகாரன் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவனை ஓட விடுவது சரியா? அதிலும் அரசியே பார்த்து ஓட அவனை அனுமதிக்கலாமா?

**அரசி:** உன்னை மன்னிப்பதாக முதலில் சொல்லிவிட்டேன், அந்த வாக்கைக் காப்பற்றவே சொல்கிறேன்!

**கவி:** அப்படியானால் மற்றொரு வாக்குக் கொடுத்தீர்கள், நான் காதலிக்கும் பெண்ணை எனக்குத் தருவதாக!

**அரசி:** காதலியைத் தருவதாகச் சொன்னேன், ஆனால் அந்தப் பெண் உங்களைக் காதலிப்பதாகத் தெரியவில்லையே!

**கவி:** அரசிக்குப் பயந்து அந்தப் பெண் இருக்கிறாள். என் முன்னிலையில் அப்படிச் சொல்லவும் மறுக்கலாம். தனிமையாகக் கேட்டுப் பாருங்கள், அவள் ஒப்புக்கொள்வாள்!

**அரசி:** அப்படியானால், கேட்டு வைக்கிறேன்! இப்பொழுது நீ போகலாம்!

**கவி:** இல்லை, இப்பொழுதே எனக்குப் பதில் வேண்டும். ஒருவனுடைய வாழ்வில் இதைப்போன்ற நல்ல நேரம் ஒரே ஒரு தடவை தான் வரும்! அதைத் தவற விட்டால் பின் அந்த நேரம் வரவே வராது! எவ்வளவு மாதங்களாக, நாட்களாக இந்தப் பொழுதை எதிர்நோக்கி உயிர் வாழ்ந்திருக்கிறேன்! இரண்டாண்டுகளுக்கு முன் முடிசூட்டு விழாவின் போது, கொலு மண்டபத்தில் உங்களைப் பார்த்தேன்! பெண்மை எழிலுக்கு முடி சூட்டுவதுபோல இருந்தது! என்னுடைய நீண்ட கற்பனைக் கனவுகளில் கூட அவ்வளவு கனிவு ததும்பும் அழகை நான் எண்ணிப் பார்த்ததில்லை. மற்றவர்கள் மணிமுடியை, அதிலிருந்த மாணிக்கக் கற்களைப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது, நான் அதன் கீழிருந்த மதி முகத்தை, ஒளி வீசும் விழிச் சுடர்களைக் கண்டபடி இருந்தேன். ஆனால் இவ்வளவு மென்மையான மலரின் மீது, முள்ளாலான பெரிய மணி முடி அழுந்துகிறதே என நினைந்து மனம் நொந்தேன்!

**அரசி:** எவ்வளவு உண்மை! முள்ளாலான பாரம்போலத் தான் அது இருக்கிறது.

**கவி:** பின்பு நான் எதிர்பார்த்தது உண்மையானது. போர்க்களங்களில் அரசி வந்தபொழுது, முதலிலிருந்த கனிவு போய் கடுமை காணப்பட்டது.

**அரசி:** போர்க்களங்களில் நீயும் வந்திருந்தாயா? அங்கு என்ன செய்தாய், பாடமுடிந்ததா?

**கவி:** போர் வீரனாகப் போரி[...] டேன்! ஒரு போரில் உங்[...] ளுக்கு எதிராகவும், இரண்[...] போர்களில் உங்கள் பக்[...] திலும் போராடினேன்! [...] தப் பக்கத்திலிருந்தாலு[...] உங்களை ஆபத்துச் சூழ்[...] நேரத்தில் உங்கள் பக்[...] தில் நான் தாவிவந்து நி[...] றேன்! உங்களைக் காப்பாற்[...] இரண்டு படைகள் மட்[...] மல்ல, இருபது படைக[...] வந்திருந்தாலும் நா[...] எதிர்த்து நின்றிருப்பேன்!

**அரசி:** சென்ற ஆண்டு மேற்[...] எல்லையில் நடந்த போரி[...] குதிரைமீதுமுகமூடியணிந்[...] வந்த வீரன் நீதானா?

**கவி:** ஆம்!

**அரசி:** எதிரிகளால் சூழப்ப[...] டுக் கொல்லப்படும் நெரு[...] கடி வந்ததே!

**கவி:** அப்பொழுதெல்லாம் க[...] மூடித்தனமான முரட்டு[...] தனம் இருந்தது. இறந்[...] போனால் நல்லது என்[...] கூட நினைத்தேன். நா[...] காதலித்தேன், ஆனா[...] காதல் கைகூடும் என்ற ந[...] பிக்கை இல்லை. ஆக கடு[...] பாய்ச்சலில் சாவை அ[...] கூவி அழைக்கும் துணிச்[...] லுடன் போரிட்டேன்[...] ஆனால் சாவு அழைக்கு[...] போது வருவதில்லை என[...] பது தெரிந்தது.

**அரசி:** போர் முடிந்ததுப[...] தீரத்துடன் போரிட்ட அந்[...] வீரனைத் தேடிப் பார்க்க[...] சொன்னேன் பரிசு தர[...] காணவில்லை.

**கவி:** நான் அடைய விரும்பி[...] யது அரசிதரக்கூடிய பரிசை[...] அல்ல, ஒரு பெண் தர[...] கூடிய காதலை! கொலு மண்[...] டபத்தில், போர்க்களத்தி[...] இவைகளில் வீரதீரத்தை[...] பற்றிப் பேசலாம், ஆனா[...] காதலைப்பற்றிப் பேசமுடி[...] யாது! காதலைப் பற்றி[...] பேச, கவிதை. நிலவு, தென[...] றல், பொழில் இவைகள[...] இருக்கவேண்டும் என[...] நினைத்தேன்! அதற்கா[...] காத்திருந்தேன்! அந்[...] நேரம் இதுதான்! காதல[...]

---

நாசிக் கட்சியில் இட்லர் சொல்வதற்கு யாரும் மறுப்புச் சொல்வதில்லையாம். அதற்கு இந்த நகைச்சுவை துணுக்கு வேடிக்கையாகத் தரப்படுகிறது.

ஒருசமயம் ஒரு சங்க ஆண்டு விழா ஒன்றில், நாசிக் கட்சிக்கு நிதி சேர்க்க, ஒரு சாமானை ஏலம் போட்டார்கள்.

வான் ரிப்பன்ட்ராப் "ஐம்பது பிராங்க்!" என்று ஏலங் கேட்டார்.

கொயரிங் "நூறு பிராங்க்!" என்று உயர்த்தினார்.

கொயபல்ச "இருநூறு பிராங்க்!" என்று மேலும் உயர்த்தினார்.

எங்கோ பார்த்துக்கொண்டிருந்த இட்லர் "பத்து பிராங்க்!" என்று கேட்டார்.

ஏலம் போட்டவர் "பத்து பிராங்க், பத்து பிராங்க்!" என்று கூவி, இட்லரிடம் பத்து பிராங்குக்கு அந்தச் சாமானை ஏலத்துக்கு விட்டார்.

---

அழைக்கிறது, அரசியே உங்கள் பதில் என்ன?

அரசி: ஐயோ! கடைசியாக அரசி என்று ஏன் சொல்கிறீர்கள்? காதலுக்கு [illegible] எளிதான பதிலை ஒரு பெண்ணால் தந்துவிட முடியும். ஒரு அரசியால் முடியாதே! இந்த நேரத்தில் என்னை யாராவது பார்த்தால் என்னிநகையாடுவார்களே! போருக்கு நான் அஞ்சியதில்லை, போருக்குத் நான் அஞ்சியதில்லை, நான் முடிசூடிய நாளிலிருந்து அடுக்கடுக்காக எதிர்ப்புகளையெல்லாம் எதிர்த்து நின்று சமாளித்திருக்கிறேன். இன்றைக்கு எனக்கு எதிரில் மானே நிறுத்தப்பட்டுள்ளேன்.

கவி: நான் போகிறேன், ஆனால் உங்களிடம் கடைசியாக ஒன்று சொல்கிறேன், இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் 'காதல்! காதல்!' எனக் கூப்பிடத்தான் நேரும். ஆனால் கூப்பிட்ட நேரத்தில் அது கிடைத்துவிடாது. நான் போகிறேன்!

அரசி: எங்கு?

கவி: எங்குவேண்டுமானாலும், எங்கேயாவது என்னைப் பற்றி நான் கவலைப்படவில்லை! பெண்ணே! உன்னைப்பற்றிதான் இவ்வளவு நாட்களும் கனவு கண்டேன், கற்பனையில் காதலித்தேன், கவிதையில் மகிழ்ந்தேன்! எனது கனவு கலைந்தது, கற்பனை மறைந்தது, கவிதை இனி வெறும் ஏடுகள்!

அரசி: சற்று நில்லுங்கள்! இதுவரை நாம் பேசியதெல்லாம் போதும். இதுவரை அரசி பேசினாள். இப்பொழுது பெண்-மாதேவி பேசுகிறாள். இப்படி உடைந்த மனதுடன் நீங்கள் போவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இன்று மாலை உங்களை நான் பார்த்தபொழுதே என் மனக் கலக்கம் ஆரம்பமானது. அந்தக் கவிதைகளைப் படித்த பொழுது, எனக்குத்தான் அந்தக் கவிதைகள் என்பது தெரியும். அந்தக் காதலை எதிர்த்துப் போராடினேன். பலனில்லை! நேற்று வந்திருந்தால், நான் வலிவுடன் இருந்திருப்பேன், நாளைக் காலை இந்தக் கவிதைகளைப் பார்த்தால் ஏதோ கற்பனை நயமென்று எனச் சென்றிருப்பேன். ஆனால் இன்றைய இரவு எல்லாம் கூடி என்னைச் சோதனைக்குள்ளாக்கிவிட்டன.

கவி: சொற்களில் எவ்வளவு மாற்றம்! குரலில் எவ்வளவு கனிவு! அப்படியானால் எனது கனவு நனவாகி விட்டது! மாதேவி! என் கண்ணே!

அரசி: அன்பே! கனவு நனவாகவில்லை! இன்றைய இரவில் நனவு கனவாகியிருக்கிறது. இரவு கூட கனவில் ஆழ்ந்திருக்கிறது! அதை நாம் கலைக்கவேண்டாம்! எல்லாவற்றையும் மறந்து விடுவோம், கனவு காண்போம்! எனக்கு இந்தக் கனவு புனிதமானது! நேற்றைய துயர்கள், நாளையக் கவலைகள் எல்லாம் ஒருபுறம் ஒதுங்கியிருக்கட்டும்!

கவி: உலகை மறந்து நாம் இருந்து விடக்கூடாது. நமது காதல் எத்தகைய நெருக்கடிகளை உண்டாக்கும் என்பதை எதிர்பார்க்க வேண்டும்.

அரசி: எப்படி மாறிவிடுகிறது. இதுவரை கவிஞர் கனவு கண்டார், நான் உலகைக் கவனித்தபடி இருந்தேன். இப்பொழுது நான் கனவு காண ஆரம்பித்துள்ளேன், கவிஞர் உலகைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

கவி: துயர்களின் மத்தியில் கனவுகாணும் திறன் வேண்டும். நல்ல கனவு தோன்றினால் அதை நனவாக்க முயலவேண்டும். நான் யார் என்பதைக்கூட நீ தெரிந்து கொள்ளவில்லையே!

அரசி: தெரிந்துகொள்ள வேண்டியதில்லை, என்னைக் காதலிக்கிறீர்கள், அதுமட்டும் போதுமானது! உலகம் உங்களைப்பார்த்து நாடோடி, பாடகன், சதிகாரன் என்று ஏதேதோ கூறும். ஆனால் என் உள்ளத்தில் காதலர் என்ற ஒரு சொல்மட்டும் ஒலிக்கிறது.

கவி: மாதேவீ! அரசியைச் சிறைபிடிக்க நான் திட்டந் தீட்டியதாக காவற் தலைவர் கூறினாரே, அந்தத் திட்டம் என்ன தெரியுமா?

அரசி: என்ன அது?

கவி: காதல் கவிதையைப் பார்த்து, அவர் சதித் திட்டம் என்று முடிவு கட்டிவிட்டார். முல்லைக் காட்டில் முழுநிலா முற்றத்தில் நறுமலர் விரித்த நீதறு மஞ்சத்தில், அரசி மாதேவியைச் சிறையெடுத்து, ஆயிரந் தண்டனைகள் தரவேண்டுமென நான் கவிதை எழுதினேன். பிடிபட்டதும் என் காதலை அவர் காணுதிருக்க, ஓலையைக் கிழித்தெறிந்தேன். துண்டுகளைப் பொறுக்கி, அவர் என்னைச் சதிகாரனுக்கிவிட்டார்.

அரசி: அரசியை வீழ்த்த இவ்வளவுநாட்களாக சதிசெய்து தானே வந்திருக்கிறீர்கள்! ஆரம்பத்திலேயே என்னைப் பார்த்திருந்தால், நானும் அந்தச் சதியில் சேர்ந்திருப்பேன்! உங்களுடைய பெயரென்ன?

கவி: கதிர்ச் செல்வன்!

அரசி: காவல் தலைவரிடம் சொன்ன பொய்ப் பெயரை என்னிடமும் சொல்லவேண்டாம். உண்மையான பெயர் என்ன?

கவி: உன் காவல் தலைவர் ஏற்றுக்கொண்டார், நீமட்டும் ஏன் சந்தேகப்படுகிருய்? எந்தப் பெயர் இருந்தாலென்ன, ஏதேதோ பெயரிட்டு உறவினர் அழைத்தார்கள், ஆனால் எல்லாவற்றையும் விட 'அன்பே!' என நீ அழைத்த பெயர்தான் எனக்குப் பிரியமானது! எங்கே மறுபடியும் கூப்பிடு!

(அரசி பேசாமல் இருக்கிருள்.)

கவி: என்ன சிந்தனை?

அரசி: நம்மைப் பற்றிய, நம் காதலைப்பற்றிய அச்சம் மூண்டது.

கவி: அது நிலைபெறுமா என்று?

அரசி: இந்தக் காதல்—எதிர்பாராத வகையில், மின்னல் வேகத்தில் வந்துள்ளது.

கவி: என்னைப் பொறுத்தவரை இரண்டாண்டுகளுக்கு முன் போடப்பட்ட செடி, இன்றுதான் மலரத் தொடங்கியுள்ளது. இந்தக் காதல் நிச்சயம் ஈடேறும், அதில் கலக்கம் வேண்டாம்!

அரசி: கலங்கவில்லை. ஏற்பட்ட மகிழ்ச்சி மயக்கத்தைத் தருமளவு இருக்கிறது! நடப்பது, கனவோ நனவோ என்று என்னை நானே கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கவி: கண்ணை மூடிக்கொள், கனவு தெரியும்!

(அரசி கண்ணை மூடிக் கொள்கிருள். கவிஞன் ஒரு செடிக்குப்பின் போய் ஒளிந்து கொள்கிருன்.

அரசி கண்ணைத் திறக்கிருள். கவிஞனைக் காணேம். செடிக்குப்பின்னல் ஒளிந்திருப்பது தெரிகிறது அரசி பிடிக்க ஓடிவருகிருள். கவிஞன் தப்பி ஓடி வருகிருன். காலிடறி விழுகிருன். அரசி அருகில் வந்து பார்க்கிருள்.)

அரசி: காலில் அடிபட்டு, இரத்தம் வருகிறதே!

கவி: இது உன் போர் வீரர்களிடமிருந்து தப்பி வந்த பொழுது ஏற்பட்ட காயங்கள்!

அரசி: திறமையற்ற அந்த வீரர்களுக்கு என்ன பரிசு தரலாம்! (காயத்தைக் கட்டுகிருள்) எவ்வளவு பலவீனமாக இருக்கிறீர்கள்! இரண்டு நாட்களாகச் சிறையில் சரியாக உணவு கிடைத்திருக்காது!

கவி: என் கவிதைகள் தாம் என் உள்ளத்திற்கு உணவாயிருந்தன, அதில் நான் வாழ்ந்தேன்.

அரசி: சற்று நேரம் இருங்கள் நான் போய் உணவு, பழம், பால் எடுத்து வருகிறேன்! நான் கூடச் சரியாகச் சாப்பிடவில்லை!

(அரசி செல்கிருள். கதிர்ச்செல்வன் மேடை மீது உட்கார்ந்திருக்கிருன். மறுபுறத்திலிருந்து சந்தடி கேட்கிறது "இந்தப் பக்கம் போயிருப்பானு?" "எங்கு தான் போனுன்?" என்று சத்தங்கள் வருகின்றன.

கதிர்ச்செல்வன் எழுந்து, தள்ளாடி நடந்து செடிக்குப்பின் மறைந்துகொள்கிருன்.

நான்கு வீரர்கள் மிகுந்த களைப்புடன் வருகிருர்கள்.

1வது: கோட்டையைச் சுற்றியும் அரண்மனை பூராவும் தேடிவிட்டோம். அந்தச்சதிகாரன் எங்கு மறைந்தான் என்றே தெரியவில்லை.

2வது: அவன் தப்பியது தெரிந்தால், நமக்கல்லவா கடுந்தண்டனை கிடைக்கும்!

3வது: பொழுது விடிய இன்னும் கொஞ்ச நேரந்தான் இருக்கிறது. அதற்குள் சிரச்சேதம் செய்துவிடவேண்டும்.

4வது: அவன் அகப்பட்டால்லவா?

2வது: எங்கு போய்விடுவான்?

1வது: மறுபடியும் அதிக ஆட்களுடன் போய் நாம் முதலில் கிளம்பிய இடத்திலிருந்து தேட ஆரம்பிக்கலாம். எங்கேயாவது மறைந்திருப்பான்!

---

கடன் கொடுத்தவர் பணத்தை வசூல் செய்ய பிராது போட்டார். நீதிபதி அவரை விசாரித்தார்.

"கடனைத் திருப்பித் தருமாறு கேட்டாயா?"

"கேட்டேன்"

"பேச்சிலா, எழுத்திலா?"


"எழுத்து மூலம்!"

"கடன்காரர் என்ன சொன்னர்!"

"இப்பொழுது கிடையாது. குட்டிச்சுவற்றில் போய் முட்டிக்கொள் என்றார்."

"என்ன செய்தாய்?"

"நேராகக் கோர்ட்டுக்கு வந்தேன்!"



4வது: எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும். சீக்கிரம் கிளம்புங்கள்! (புறப்படுகிறார்கள்)

1வது: (சென்றவன் திரும்பி வந்து) இதோ! இரத்தம் சிந்தியிருக்கிறது! அவன் இங்குதான் வந்திருக்க வேண்டும்!

(மற்ற வீரர்கள் பரபரப்புடன் சூழ்ந்து தரையில் இருக்கும் இரத்தத்தைப் பார்க்கிறார்கள்.)

2வது: இரத்தம் சொட்டிக்கொண்டு இந்தத் திக்கில் போயிருக்கிறது.

(வீரர்கள் சுற்றி வருகிறார்கள். கடைசியாகச்செடி மறைவில் இருந்த கதிர்ச் செல்வனைப் பிடித்துவிடுகிறார்கள்.)

தீர்: ஒன்றும் செய்யாதீர்கள், மறுபடியும் உங்கள் அரசியைக் கேளுங்கள்!

வது: கேட்பதற்கென்ன இருக்கிறது!

2வது: இவன் பேச்சைக்கேட்டால், மறுபடியும் ஏமாற்றிக்கொண்டு ஓடிவிடுவான்!

வது: சீக்கிரம் போகவேண்டும். அவன் தப்பித்துப் போனது யாருக்கும் தெரியாமலிருக்கவேண்டும்.

(வீரர்கள் இழுத்துப் போகிறார்கள்)

தீர்: அரசி! அரசி! வீரர்களே! நான் யார் தெரியுமா?

வது: இவன் இப்படிச் சத்தம் போட்டபடிதான் இருப்பான். இரு! (ஒரு துண்டை அவன் முகத்தில் போட்டு, வாயைச் சுற்றி பேசமுடியாமல் செய்துவிடுகிறான். போர் வீரர்கள் அவனை இழுத்துச் செல்கிறார்கள்.

சிறிது நேரத்தில், அரசி ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டு கையில் பழத்தட்டுடன் வருகிறாள். மேடை மீது தான் கொண்டுவந்தவற்றை வைத்து, சுற்றிலும் பார்க்கிறாள்)

சி: மறுபடியும் செடிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாரா?

(வேடிக்கையாக முதல் செடிக்குப் பின்னால் போய் பார்க்கிறாள், அவன் இல்லை.)

சி: எங்கு ஒளிந்து கொண்டார்? இடம் மாறிவிட்டதா?

(மற்ற செடிகளுக்குப் பின்னால் பார்க்கிறாள். கதிர்ச்செல்வனைக் காணோம்.)

சி: (மெதுவாக) அன்பே! (சத்தம் கேட்குமென்று தன் வாயைப் போத்திக்கொள்கிறாள். மறுபடியும் சற்றுப் பலமாக) கண்ணாளா! கண்ணாளா!

(கடைசியாக அரசிப் பலமாகச் சத்தமிடுகிறாள்.

தோழி செந்தாமரை கண்ணைத் துடைத்துக் கொண்டு வருகிறாள்)

: என்ன அம்மா! இன்னமுமா விழித்துக்கொண்டிருக்கிறீர்கள்!

அரசி: செந்தாமரை! நீ வந்தபொழுது அந்தக்கவிஞர் உன் எதிரில் சென்றாரா?

செந்: யாரது?

அரசி: மாலை கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டாரே!

செந்: ஓ! அந்தச் சதிகாரனா? அவன் எப்படி இங்குவந்தான்?

அரசி: கேள்வியெல்லாம் பின்பு இருக்கட்டும், சற்றுமுன் இங்கு வந்தவரைக் காணோம். சீக்கிரமாகத்தேடு, எங்கேயாவது ஒளிந்து கொண்டு இருக்கிறாரா என்று பார்க்கலாம்!

செந்: ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், அம்மா! நான் போய் அவசரமணியடித்து எல்லோரையும் கூப்பிட்டு தேடச்செய்கிறேன்!

(போகிறாள்.)

(உள்ளே மணியடிக்கும் சத்தம் கேட்கிறது.)

அரசி: எங்கு போய்விட்டார்? ஒருசமயம் வசந்த மண்டபத்தினுள் போய் ஒளிந்து கொண்டாரா? கண்ணாடி மாளிகையினுள் சென்று திரும்பிவரமுடியாமல் தவிக்கிறாரா? என்ன செய்யலாம்?

(தேடிக்கொண்டு உள்ளே போகிறாள். செந்தாமரை ஒருபுறம் வருகிறாள். எதிர்ப்புறம் படைத்தலைவரும், கோட்டைத் தலைவரும் வருகிறார்கள்.)

கோட்டை: ஏன் இந்த அவசர அழைப்பு?

செந்: நேற்று கைது செய்யப்பட்ட சதிகாரன் இங்கு வந்துவிட்டான்.

படை: தப்பிஓடிவந்துவிட்டானா?

செந்: ஆமாம்! அரசி பயப்படுகிறார்கள்! அவனைச் சீக்கிரம் கண்டுபிடித்துவிடுங்கள்!

படை: நான் போய், படைவீரர்களை அனுப்பித் தேடச்செய்கிறேன்! அரண்மனையை விட்டு வெளியேறுதபடி செய்கிறேன்!

(காவல் தலைவர் வருகிறார்.)

காவல்: என்ன ஆபத்து! ஏன் இந்த அவசரமணி?

படை: உன் பாதுகாப்பில் அனுப்பப்பட்ட சதிகாரன் தப்பித்துக்கொண்டு இங்கு வந்துவிட்டானாம்!

காவல்: நான் அவனைப் பலத்த பாதுகாப்புடன் கோட்டைக்கு அல்லவா அனுப்பினேன்! எப்படித் தப்பிவந்தான்!

படை: அதற்குப் பதில் நீர்தான் சொல்லவேண்டும்!

காவல்: அவனை எப்படியும் நான் பிடித்துவிடுகிறேன்! நீங்கள் பயப்படவேண்டாம்!

(படைத்தலைவனும், காவல் தலைவனும் செல்கிறார்கள்.)

கோட்டை: என்ன நடக்கிறதென்றே புரியவில்லை! அரண்மனையில் ஒரே குழப்பமாயிருக்கிறது!

(அரசி வருகிறாள்.)

அரசி: கண்டுபிடித்து விட்டீர்களா?

கோட்டை: காவல் தலைவரும் படைத்தலைவரும் சென்றுள்ளார்கள். நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம்.

அரசி: சீக்கிரம்! சீக்கிரம்! எப்படியாவது, கண்டுபிடித்துக் கொண்டுவாருங்கள்! எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன்!

(ஊதுகுழல் சத்தம் கேட்கிறது. காவல் தலைவர் வருகிறார். பின்னால் நான்கு வீரர்கள் வருகிறார்கள்.)

அரசி: கண்டுபிடித்தீர்களா?

காவல்: அரசியார் எதற்கும் கவலையுறவேண்டாம்!

அரசி: எங்கே? எங்கே அவர்?

காவல்: இதோ! (சுட்டிக் காட்டுகிறார். ஒரு போர் வீரனின் கையில் ஒருதட்டு இருக்கிறது. அதில் மூடப்பட்ட துணியைச் சிறிது விலக்குகிறான். வெட்டப்பட்ட தலை உள்ளிருக்கிறது.)

அரசி: (கூச்சலுடன்.) ஐயோ! கொலை பாதகர்களே! அவரைக் கொலைசெய்துவிட்டீர்களா! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!

(மேடையில் விழுந்து புலம்புகிறாள்.

எல்லோரும் திகைத்தபடி இருக்கிறார்கள்.)

காவல்: அவனுக்கு விதித்த தண்டனைப்படி அவன் சிரச்சேதம் செய்யப்பட்டான்!

அரசி: (கோபத்துடன்) இல்லை, அவர் இங்கு திரும்பி வந்தபோது மன்னித்தேன்!

காவல்: திரும்பி அவன் வந்தானா? (காவல் வீரர்களைப் பார்த்து) உங்களுடன் அனுப்பிய அந்தச் சதிகாரன் தப்பி ஓடிவந்தானா?

போர்வீரன்: இல்லையாதே! நேராக அவனை சிரச்சேதம் செய்யும் இடத்துக்குக் கொண்டுபோய், தண்டனையை நிறைவேற்றினோம்!

காவல்: அவன் தப்பி வந்திருக்க முடியாதே!

அரசி: என்ன, நான். கண்டதெல்லாம் பொய்யா? அவர் இங்கு வந்தது, பேசியது, எல்லாம் கனவா?

காவல்: நான் தண்டனை கொடுத்து அனுப்பியதற்குப்பின் அந்தச் சதிகாரன் வந்திருக்கவே முடியாது!

அரசி: அவர் சதிகாரரல்ல! நீங்களெல்லோரும் சதிகாரர்கள்! நீங்கள் சதி செய்து அவரைக் கொலைசெய்துவிட்டீர்கள்! என் காதலைக் கொலை செய்துவிட்டீர்கள்! அவருக்குப் பதில் இந்த அரசையேக் கேட்டிருந்தாலும் தந்திருப்பேனே! கொடுமைக்காரர்களே, கொலைபாதகர்களே!

(அழுதுகொண்டு உள்ளே ஓடுகிறாள்.)

காவல்: எனக்கு ஒன்றும் புரியவில்லை! சதிகாரன் தப்பித்துக்கொண்டு வந்ததாகக் கற்பனை செய்தார்கள்! பின் நம்மைப் பார்த்து கொலைகாரர்கள், சதிகாரர்கள் என்கிறார்கள்!

படை: அரசியாருக்கு மனக்குழப்பம் ஏற்பட்டிருக்கிறது!

கோட்டை: செந்தாமரை! நீ போய் அரசியாரைக் கவனித்துக்கொள்! நான் சென்று அரண்மனை வைத்தியனை அழைத்து வருகிறேன்! அதுவரை அரசியாருக்கு மனக்குழப்பம் ஏற்பட்டிருப்பது வெளியில் தெரியவேண்டாம்!

(போகிறார். மற்றவர்கள் கவலையுடன் நிற்கிறார்கள்)

— முற்றியது —


## மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 15·00 |
| ஓராண்டு | ... | ரூ. | 8·00 |
| ஆறுமாதம் | ... | ரூ. | 4·00 |
| தனி இதழ் | ... | | 16 காசு |

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 18·75 |
| ஓராண்டு | ... | ரூ. | 10·00 |

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ... | 20 காசு |

# ஐந்தாண்டுத் திட்ட அலங்கோலம்!

——(0)——

## ஒன்றுக்கு இரண்டுபங்கு செலவு.

——(0)——

### உத்தரப் பிரதேசத்தில் கண்மூடிப் போக்கு.

——0——

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற, பணத்துக்கு என்ன செய்வது என்ற நிலையில் மத்திய அரசாங்கம் இருக்கிறது. திட்டக் குழுவினர் காகித அளவில் சில கூட்டல் கழித்தல் கணக்குகளைப் போட்டுக் காட்டிவிட்டனர். ஆனால் எதிர்பார்த்தபடி நிதி கிடைக்கவில்லை. கிடைக்குமென்ற நம்பிக்கையும் வரவரத் தளர்ந்துகொண்டேபோகிறது, இந்த நிலையில் கிடைக்கக்கூடிய நிதி அளவுக்குத் தக்கபடி திட்டத்தை மாற்றிக்கொள்வது எனக் காங்கிரசுக்காரர்களே கருத்துரை வழங்கினார்கள். திட்டத்தின் முக்கிய அடிப்படையைச் செய்து முடிக்க வேண்டும் என நிதி மந்திரி கூறுகிறார். திட்டத்திற்கு வேண்டிய அளவு இப்பொழுதுள்ள முறைப்படி நிதி கிடைக்காது என்பது நிச்சயமாகி, எந்த வகையில் திட்டச் செலவுகளைக் குறைப்பது என்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

எதிர்பார்த்த அளவுக்கு நிதி கிடைக்கவில்லை. இது ஒரு புறத்தில் ஏற்பட்டுள்ள சங்கடநிலை. மற்றொரு புறத்தில், திட்டத்தின்கீழ் எதிர்பார்த்ததைவிட அதிகமான செலவு செய்யப்படுகிறது. வடக்கில், அதிலும் உத்திரபிரதேசத்தில் போடப்பட்டுள்ள திட்டங்களில் எதிர்பார்த்ததை விட அதிகமான அளவு செலவிடப்படுகின்றனவாம்.

உத்தரப் பிரதேசத்தில் மாடதில என்ற இடத்தில் ஒரு அணைக்கட்டு கட்ட திட்டமிடப்பட்டது. அந்த அணைக்கட்டுக்கு அரசாங்கம் போட்ட திட்டம் 4 கோடி 81 லட்சம் ரூபாய்க்கு! அந்த அணைக்கட்டில் முதலாவதாக அடிப்படையும், கரைகளும் கட்டப்பட்டுள்ளன. இரண்டாவதாக மேல் கட்டி முடிக்கும் வேலை துவங்கியுள்ளது, இதற்குள்ளாக போட்டதைப்போல இரண்டு பங்கு செலவாகிவிட்டது.

**மாடதில அணைக்கட்டுக்கு போட்ட திட்டம் 4 கோடி 81 லட்ச ரூபாய்க்கு. ஆனால் செலவாகியுள்ளது ஏறத்தாழ 10 கோடி ரூபாய். ஆனால் வேலை பாதியளவுதான் ஆகியுள்ளது.**

இந்த அணைக்கட்டுக்கு ஒன்றரை மைல் தூரத்தில் அர்ஜுன் என்ற நதியில் ஒரு சிறு அணைக்கட்டு கட்ட அரசாங்கம் 95 லட்சம் ரூபாய் திட்டம் தீட்டியது. அணைக்கட்டை இப்பொழுது கட்டி முடித்துவிட்டார்கள். ஆனால் எதிர்பார்த்ததைவிட "மிக அதிகமான" செலவு ஏற்பட்டுவிட்டதாக அரசாங்க அறிக்கை கூறுகிறது. எந்த அளவு அதிகமான செலவேற்பட்டதென கூறவில்லையாயினும், அதுவும் பல லட்சங்களுக்குமேல் சென்றிருக்கும்.

அதேபோல் சப்ரார் என்ற இடத்தில் 47 லட்ச ரூபாயில் ஒரு நீர்ப்பாசனத் திட்டம் போடப்பட்டது. அதுவும் மேற்குறித்த இரண்டு திட்டங்களுக்கு அருகாமையில் உள்ளது. **47 லட்ச ரூபாயில் போடப்பட்ட சப்ரார் திட்டம் இப்பொழுது ஒரு கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளது.**

திட்டம் போடும்பொழுது எதிர்பார்த்த செலவுகளைவிட, இரண்டு மடங்கு அதிகமாக அங்கு செலவழிக்கப்படுகிறது. ஐம்பது லட்சத்தில் போட்ட திட்டத்தை ஒரு கோடி ரூபாய் செலவில் முடிக்கிறார்கள். 5 கோடி ரூபாயில் போட்ட திட்டத்துக்கு 10 கோடி ரூபாய் செலவாகிறது!

எல்லாம் எப்படி நடக்கிறது என்று கேட்கத் தோன்றும். அவ்வாறு ஒன்றுக்கு இரண்டாகச் செலவாவது இங்கல்ல, வடக்கில், உத்தரப் பிரதேசத்தில்!

உத்தரப் பிரதேசமென்றால் எது தெரியுமோ? "இந்தியா என்பது பாரதம், பாரதம் என்பது உத்தரப் பிரதேசம்!" என்று காங்கிரசுப் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்திய துணைக்கண்டமே உத்தர பிரதேசக்காரர்களிடம் அடங்கியிருக்கிறது. மற்ற இடங்களில் திட்டங்களை ஒன்றுக்குப் பாதியாகக் கால் பகுதியாகக் குறைக்கிறார்கள், உத்தரப் பிரதேசத்தில் போட்ட திட்டங்களுக்கு இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகச் செலவாகிறது! ○

## ஊருக்குமட்டும் உபதேசம்

——(0)——

### காங்கிரசுக் கட்சி பலஞ் சேர்க்கும் முறை!

——(0)——

"ஊருக்கு உபதேசம், உனக்கில்லையடி" என்ற பழமொழியை காங்கிரசுப் பெண் உறுப்பினர் சொன்னார். மற்றக் கட்சிகளுக்கு அறிவுரை புகட்ட வந்த அம்மையார் அவ்வாறு சொன்னார்கள். ஆனால், அந்தப் பழமொழி இப்பொழுது காங்கிரசுத் தலைவர்களுக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது.

"மாணவர்காள்! அரசியலில் கவனஞ் செலுத்தாதீர்கள்!" என்று மாணவர்களைப் பார்க்கும்பொழுது காங்கிரசுத் தலைவர்கள் கூறினார்கள்.

அதே போல் மற்ற அரசியல் கட்சிகளைப் பார்த்து "மாணவர்களை அரசியலில் இழுக்காதீர்கள்!" என்று கேட்டுக் கொண்டார்கள்.

"மாணவர்கள்தாம் இந்த நாட்டின் எதிர்கால வழிகாட்டிகள், இளைஞர்கள்தாம் எதிர்கால மன்னர்கள்" என்றெல்லாம் முன்பு மாணவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த காங்கிரசுக்கட்சி ஏன் இப்பொழுது அவர்கள் பக்கம் அரசியல் வாடை வீசக்கூடாது என்று சொல்கிறார்கள் என்று பலருக்குப் புரியவில்லை.

தேர்தலுக்குப்பின் கூடிய காங்கிரசுக் கமிட்டி தந்த அறிக்கையில், "மாணவர்களுடன், இளைஞர்களுடன் காங்கிரசுக்கு இருந்த தொடர்பு குறைந்து வருகிறது. தேர்தலில் பல இடங்களில் காங்கிரசுக்கு எதிராக மாணவர்களும், இளைஞர்களும் வேலை செய்திருக்கின்றனர்" என்று சொன்னார்கள். ஆக, மாணவர்கள் தம் பக்கத்தில் இல்லாத காரணத்தால், அரசியலில் ஈடுபட வேண்டாமென்று மாணவர்களுக்கு புத்திமதி தந்தார்கள்.

மாணவர்களுக்கு அரசியல் கூடாது என்று கூறும்பொழுது, மற்றக் கட்சிகளின் அரசியல் கூடாது என்றுதான் காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள். மற்றக்கட்சிகளை ஒதுக்கிவிட்டு, தாம் மட்டும் மாணவர்களை இழுத்துக் கொள்ளத் திட்டமிடுகின்றனர்.

இளைஞர்களுடன் தொடர்பு கொள்ள புது அமைப்புகளை உண்டாக்கவேண்டுமென்றும் அதற்கான செலவுகளைத்தர காங்கிரசு மத்திய அமைப்பு ஒப்புக்கொண்டது.

அதனை ஒட்டி புது அமைப்புகளை காங்கிரசு உண்டாக்கி வருகிறது.

காமராஜரின் பாதுகாப்பில் இளைஞர் காங்கிரசு என்ற முகாம் முன்பாகவே ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகிறது.

தமிழ்நாடு மாணவர்கள் காங்கிரசு என்ற அமைப்பை, காமராஜர் ஆரம்பித்து வைத்துள்ளார், சி. சுப்பிரமணிய[...] பாராட்டியுள்ளார், கக்கன் ஆசிர்வதித்துள்ளார். அ[...] பொழுது "காலம் மாறிவிட்டது, மாணவர்கள் அரசிய[ல்] கிளர்ச்சிகளில் ஈடுபட[...] கூடாது!" என்று காமராஜ[ர்] அறிவுறுத்தியுள்ளார். மு[...] போல, அரசியல் கிளர்ச்சிக[...] காங்கிரசுக்குத் தேவையில்[லை] என்பது அவர் கருத்து.

இளைஞர் காங்கிரசு, மாண[வ]ர் காங்கிரசு இவைகள் மட்[டு]மல்ல, இன்னுங் குறைந்த வ[ய]துடையவர்களுக்காக, "பால[ர்] காங்கிரசு" என்ற அமைப்பு[ம்] சென்னையில் உண்டாக்கப்ப[ட்]டிருக்கிறது! குழந்தைகளு[க்]காக ஒரு பகுதி!

சர்வாதிகார நாடுகளி[ல்] குழந்தைப் பருவத்திலிருந்[தே] "அரசியல் அறிவு தருவதை[ப்] பற்றிய பொறுப்பை" ஆளு[ம்] கட்சி எடுத்துக் கொள்ளு[ம்]. அது போல, சர்வாதிகார அ[ர]சியலை எல்லா வயதினரிடை[யே]யும் நிலைநாட்டக் காங்கிர[சு] முயல்கிறது.

# போர்வாள்

கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
நினைவு மலர்.

14—9—57 போர்வாள் இதழ் மலராக வெளிவருகிறது.

***

கலைவாணரின் முழு வாழ்க்கை வரலாறும் 100க்கு மேற்பட்ட படங்களும் உள்ளன.

மூவர்ண அட்டை.
60 பக்கம் விலை அணு 12.

போர்வாள்,
128, பிராட்வே, சென்னை-1.


## வினாவும் விளக்கமும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாவு — எளிதாகக் கூறிவிட முடியாது.

நீதிக்கட்சியை வெள்ளைக்கார அடிவருடிக் கட்சி என்று கருதிக்கொண்டு அதிலிருந்தவர்கள் அத்தனை பேரும் வெள்ளையர் அடிவருடிகள் என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறுகிறார் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும் அதிலும் பொருளில்லை. காங்கிரசுக் கட்சி வெள்ளையரின் 1935-ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது போலவேதான், நீதிக்கட்சியும் 1920 ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. காங்கிரசு 1936இல் அமைச்சர் அவை அமைக்கும் போதும் 1946இல் அமைக்கும் போதும் எப்படிப்பட்ட இராஜ விசுவாசப் பிரமாணத்தை இங்கிலந்து அரசனுக்குத் தெரிவித்துவிட்டு அமைச்சர் அவை அமைத்ததோ, அதே இராஜ விசுவாசப் பிரமாணத்தைச் செய்துவிட்டுத்தான்நீதிக்கட்சியும் அமைச்சர் அவை அமைத்தது. ஒரேவிதமான செயல்களைப் புரிந்த இரு கட்சிகளுள் நீதிக்கட்சி எப்படி வெள்ளையர்க்கு அடிவருடிக் கட்சியாகும், காங்கிரசு எப்படி ஆகாமற் போகும்?

வெள்ளையர் ஆட்சிக்கு அடிமை வேலை பார்த்தவர்களும், அதற்குப் பாராக்கு கூறியவர்களும், அது அளித்த சர்-திவான் - இராவ் பகதூர்-இராவ சாகிப் போன்ற பட்டங்களை வாங்கிக்கொண்டவர்களும் வெள்ளையர் அடிவருடிகள் என்று அமைச்சர் கூறுவாரேயானால், அப்படிப்பட்ட அடிவருடிகள் யாருமே இப்பொழுது தி- மு- கழகத்தில் இல்லை என்பதையும் அவர்களில் முக்காலே மூன்று வீசம் பேர்கள் காங்கிரசில் தான் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும அவர் உணர்வாராக.

அப்படிப்பட்ட அடிவருடிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த ராஜா சர் முத்தையாச் செட்டியார், இராமநாதபுரம் ராஜா, எட்டயபுரம் ஜமீன்தார், மதுக்கூர் ஜமீன்தார், பழைய கோட்டை பட்டக்காரர், பாதி மங்கலம் ராவ் பகதூர் தியாகராஜ முதலியார்; ராவ் பகதூர் சாமியப்பா மகனார் இராமலிங்கனார் வெள்ளையர்க்குத் துணையாக நின்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நீதிக்கட்சி அமைச்சராயிருந்த டாக்டர் சுப்பராயன், அமைச்சர் முத்தையாவுக்குக் காரியதரிசி வேலைபார்த்த மாணிக்கவேலர், போர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வெள்ளையரிடம் சம்பளம் வாங்கிய இன்னபிற ஆயிரமாயிரம் பேர்கள் இன்று காங்கிரசில்தான் இருக்கிறார்கள். இதையெல்லாம் மறந்துவிட்டு அமைச்சர் சுப்பிரமணியம் ஏதேதோ உளறிக்கொட்டுகிறார்.

அமைச்சர் கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்வீட்டின்மீது கல்லை வீசுகிறார். அந்தக் கல்லைத் திருப்பி எடுத்து வீசினால், அவரது கண்ணாடி முழுவதும் நொறுங்கும் என்பதை அவர் இனிமேலாகிலும் உணர்வாரா என்றே கருதுகிறோம்!

இரா. நெ.

## கே. ஏ. அருணாசலம்

கழக முன்னணிவீரரும் நமது கெழுதகை நண்பருமான கே. ஏ. மதியழகன் அவர்களின் சகோதரர் கே. ஏ. முருகேசன் அவர்கள் 25—8—57 அன்று கணியூரில் இயற்கை யெய்தியமை கேட்டு ஆறாத் துயருற்றோம். மதியழகன் அவர்கள் கல்லூரிப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டார். அதிலிருந்து அவருக்கு எத்தகையக் குறை நேராவண்ணம் ஊக்கங் கொடுக்கும் வகையில், கே. ஏ. முருகேசன் அவர்கள் குடும்ப அலுவல்களைக் கவனித்து வந்ததுடன், கழகத்தினிடமும் கழகத் தோழர்களிடமும் பாசமும் நேசமும் காட்டி வந்தார். உயர்ந்த பண்பும் நல்ல தன்மையும் உடைய அவரை இழந்து துயருறும் மதியழகன் அவர்கட்கும், அவருடைய சகோதரர்கள் கே. ஏ. முருகேசன், கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கட்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அறிஞர் அண்ணா: அண்ணா

# அறிஞரும் கலைவாணரும்

அறிஞர் அண்ணா அவர்களும், கலைவாணர் என். எஸ். கிருட்டிணன் அவர்களும் பிசிராந்தையாரும்-கோப்பெருஞ்சோழனும் போன்று, பல ஆண்டுகள், ஒருவரையொருவர் பார்க்காமல் பழகிவந்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவு, ஆற்றல், அருமை, பெருமைகளைக் கலைவாணர் அவர்கள் படித்தும், கேட்டும் மகிழ்ச்சியுற்றிருக்கிறார்கள். அதே போன்று கலைவாணர் என். எஸ். கிருட்டிணன் அவர்களின் நடிப்பையும், பேச்சையும், சீர்திருத்தக் கருத்துக்களையும் பற்றிப் பிறர்வாய் கேட்டும், நாடக-திரைப்பட அரங்குகளில் கண்டும் அறிஞர் அண்ணா அவர்கள் மகிழ்ச்சியுற்றிருக்கிறார்கள். ஆனால் 1943ஆம் ஆண்டு வரையில் ஒருவரையொருவர் நேரில் கண்டுகொண்டதில்லை.

1943ஆம் ஆண்டில் தஞ்சையில் நடைபெற்ற "கிந்தனார்" காலட்சேபத்தின் போதுதான் அறிஞர் அண்ணாவும்கலைவாணரும் ஒருவரை ஒருவர் கண்டு அளவளாவிக் கொண்டனர். கலைவாணர் அன்று அண்ணா அவர்களிடம் வைத்த மதிப்பை அவர்மறையுங்காலம்வரையில் அப்படியே போற்றிக் காப்பாற்றிவந்தார். அவர் வேறு யாரிடமும் அவ்வளவு மதிப்பு வைத்திருந்ததில்லை என்னலாம். அறிஞரும் கலைவாணரும் ஒரே குடும்பத்தில் பிறந்து அன்போடும் அணைப்போடும் வளர்ந்துவரும் பிள்ளைகளபோலவே பழகிவந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்த எந்தஒரு முயற்சியானாலும் அதற்குக்கலைவாணர் தம் முழு ஆதரவையும் அளித்து வந்தார். அரசியல்-பொருளியல்-சமூகவியல்-கலையியல்-மொழியியல் பற்றிய கருத்துக்களில் கலைவாணர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் பக்கந்தான் எப்பொழுதும் இருந்துவந்தார். கலைவாணர்தாம் நடத்தும் திருமணம், பெயரிடுதல்போன்ற வீட்டுநிகழ்ச்சிகளானாலும், காந்தித்தூண் நிலைநாட்டுதல் போன்று நாட்டு நிகழ்ச்சிகளானாலும் அவற்றில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்திருக்கவேண்டும் என்பதில் மிக்க முயற்சி எடுத்து, அவற்றை அவர் விருப்பப்படி வெற்றியுற நிறைவேற்றியே வந்தார். அதேபோன்று அறிஞர் அண்ணா அவர்கள் கழகப் பொதுக்கூட்டத்திலோ, மாநாட்டிலோ, கலைநிகழ்ச்சியிலோ கலைவாணர் கலந்துகொள்ளவேண்டும் என்று எண்ணினால், உடனே ஓடோடிவந்து அந்த எண்ணத்தை நிறைவேற்றிவைப்பார். மாநாடு, கலைநிகழ்ச்சி போன்ற சில சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு அண்ணா அவர்களின் அழைப்பை எதிர்பார்க்காமலேயேகூட தாமே வந்து கலந்துகொண்டு எல்லோரையும் மகிழ்விப்பார். கலைவாணர் அவர்கள் கடைசியாகத் தம் வாழ்நாளில் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஊராட்சிமன்ற வரவேற்பில் கலந்துகொண்டு அறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்துவைத்ததுதான். அதேபோது அண்ணா அவர்களும் கலந்துகொண்டு ஊராட்சிமன்ற வரவேற்பைப் பெற்றுகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் அளித்த ஊக்கத்தைத் துணையாகக் கொண்டுதான் "என். எஸ். கே. நாடகமன்றத்தை" அவர் நிறுவினார். அவர் நாடக மன்றத்திற்கு என்று அண்ணா அவர்கள் எழுதிய நாடகந்தான் "வேலைக்காரி." பிறகு அது "கே. ஆர். இராமசாமி கிருட்டிணன் நாடக மன்றத்தாரால்" நடித்துக் காட்டப்பெற்றது.

தாரமங்கலம் படத்திறப்பு விழாவின்போது அவர் பேசிய பேச்சில் தமது படுக்கை அறையில் புத்தர். ஏசு, காந்தி போன்றவர்களின் படங்களோடு அறிஞர் அண்ணா அவர்களின் படத்தையும் வைத்துப் போற்றுவதாகவும், அவற்றைச் சிந்தனைக்குத் தூண்டுகோல்களாகக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டதிலிருந்து அண்ணா அவர்களிடம் அவர் கொண்டிருந்த பற்றையும், மதிப்பையும் நன்கு அறிந்துகொள்ளலாம்.

கலைவாணர்- நகைச்சுவைமன்னர் அவர்கள் சிறைப்பட்டபோதும், அவர் இயற்கை எய்திய செய்திகேட்டபோதும், அவரது பிணக்கோலத்தைக் கண்டபோதும் அறிஞர் அண்ணா அவர்கள் உகுத்த கண்ணீர், கலைவாணரிடம் அறிஞர் கொண்டிருந்த அன்பின் பெருக்கைக் காட்டுவதாகும்.

## கலைச்சுடர் அணைந்தது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமக்கென்று ஒரு நகைச் சுவைப் பகுதியைச் சேர்த்துக் கொள்வார். பல சமயங்களில் புராணக்கதையில் வரும் பொருத்தமற்ற கற்பனைகளை வெளியாக்குவது போல், இவருடைய நகைச்சுவைப் பகுதி இருக்கும்!

வரவர கலைவாணரின் நகைச்சுவைப் பகுதிக்கு முக்கியத்துவம் வளர்ந்து, மூலக்கதைக்குள்ள மதிப்பு குறைய ஆரம்பித்தது. அவருடைய நகைச்சுவைப் பகுதி மக்களுடைய கவனத்தையும் ஈர்த்த காரணத்தால், கலைவாணரின் நகைச்சுவைப் பகுதி இருந்தால் மட்டுமே ஒருபடம் வெற்றிகரமாக ஓடும் என்ற நிலை பிறந்தது. சில படங்கள் வெளியான முதல்நாளே தோல்வி கண்டதும், திரும்பி வரவழைக்கப்பட்டு, கலைவாணரின் நகைச்சுவைப்பகுதி படமாக்கப்பட்டு, முதல்கதையுடன் ஒட்டப்பட்டு பின் மீண்டும் வெளியிடப்பட்டு வெற்றிகரமாக மக்களிடை ஓடியிருக்கின்றன! ஊரைவிட்டு ஊர், தியேட்டரைவிட்டுதியேட்டர் ஓடவேண்டிய படங்களெல்லாம், கலைவாணரின் "காமிக்" பகுதி சேர்க்கப்பட்ட காரணத்தால், ஒரே கொட்டகையில் பலநாட்கள் ஓடக்கூடிய வாய்ப்பைப் பெற்றன! வேறு எந்தக் காலத்திலும், எந்த நடிகரும் பெறாத அளவு செல்வாக்கை கலைவாணரின் நடிப்பு மக்களிடம் பெற்றிருந்தது.

கோமாளியாக வந்தவர் கோமானாக ஆட்சிபுரிந்தார்.

சிரித்துக்கொண்டே காரியத்தைச்சாதிப்பது என்று சொல்வார்கள், அதைப்போல சிரித்துக்கொண்டே தனது கருத்துக்களை அவர் பரப்பி வந்தார். நோய்ப்பட்டவனுக்குத் தரும் மருந்தை இனிப்புடன் கலந்து கொடுப்பது போல, தாம் தர விரும்பிய சீர்திருத்தக் கருத்துக்களை கலைவாணர் சிரிப்பு என்ற இனிப்புடன் கலந்து கொடுத்தார்! பல கட்டுரைகள், பல மாநாடுகள் செய்யக்கூடிய வேலையை, என். எஸ். கிருஷ்ணனின் நடிப்புக்கலை செய்தது! மருந்து வேலை செய்தது, படஉலகை முடக்கிக்கொண்டிருந்த பழமைப் பிடிப்புகள் நீங்கின! சிரிப்பின் மூலம் சிந்தனையைக் கிளறும் முறையைக் கலைவாணர் செய்த அளவு தமிழகத்தில்-இந்தியாவில் யாரும் இதுவரைச் செய்ய வில்லை என்று கூறலாம். மேலை நாடுகளில் சார்லி சாப்ளின் நகைச்சுவை நடிப்பின் மூலம் ஆழ்ந்த கருத்துக்களைப் பரப்பினர். சார்லி சாப்ளினை ஒத்த அளவுக்கு கீழ் நாட்டில் நகைச்சுவையின் மூலம் கருத்துச் சுவையைத் தந்தவர் என். எஸ் கிருஷ்ணன் ஒருவர் தாம் எனத் துணிவுடன் கூறலாம்! சார்லி சாப்ளினுக்கு இருந்ததைவிடக் கடுமையான, பலமான எதிர் நீச்சலில் நமது கலைவாணர் முன்னேற வேண்டியிருந்தது; தனது கருத்துக்களை மக்களிடம் சேர்க்க வேண்டியிருந்தது!

கலைவாணர் ஓயாமல் சிந்தனையில் ஈடுபட்டு, புதுமைகள் பலவற்றைச் சேர்த்துக் காட்டுவதில் உற்சாகத்துடன் இருந்தார்! அவரது கூர்த்த அறிவு பல்வேறு துறைகளிலும் சென்று ஒளி வீசியது என்று கூறலாம். ஒன்றைப் பார்த்தால் தானும் அதேபோல் செய்ய அவர் முயலுவார்! பொய்க்கால் குதிரையாட்டத்தைப் பார்த்தால், இரண்டொரு நாள் பழகி மூன்றாவது நாள் இவரே பொய்க்கால் குதிரை யாட்டத்தை ஆடிக் காட்டி விடுவார். இது வேடிக்கையல்ல, அதேபோல் அவர் ஆடிக்காட்டி யிருக்கிறார்! பனிக்கட்டி உறைந்த தரையில் ஓடிச் செல்ல, உருளைகள் பதிந்த மிதியடி இருக்கிறது, அதைப் பார்த்ததும் அதை வாங்கி இவரும் நகர்ந்து ஓட (ஸ்கேடிங்) ஆரம்பித்தார். கொட்டாங்கிச்சியை வைத்து ஒருவன் தட்டிக்கொண்டிருந்தால், அதைச்சிறிது நேரம் பார்த்திருந்து இவரும் அதைப் போல செய்து காண்பிப்பார்! எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் தன்மையும், கண்டவற்றை ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்ளும் திறமையும், அதற்குக் காரணம் எனக் கூறலாம்! பல் வேறு துறைகளிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தமையால், நாடகம் சினிமா இவைகளில் நடிப்பதுடன், காலட்சேபம், வில்லுப் பாட்டு, மேடைப்பேச்சு, இவைகளிலும் அவருடைய திறமை விளங்கியது!

என். எஸ். கிருஷ்ணன் ஆற்றிய பணியில் அவருடைய துணைவியார் டி. ஏ. மதுரம் அவர்கள் உறுதுணையாயிருந்தார்கள். இருவருடைய கூட்டுறவும் நடிப்பும் தமிழகத்தின் கலை உலகில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன!

என். எஸ். கிருஷ்ணன் கலையை மக்களிடம் கொண்டு வந்தார்; மக்களை அழைத்துச் சென்றார்! கோமாளி என்பதற்குப் புதிய இலக்கணத்தை அவர் வகுத்தார்.

நகைச்சுவை மன்னர்-கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைந்தார்!

சிரிக்க வைத்து, நாட்டு மக்களைச் சிந்திக்க வைத்த "சீர்திருத்தக் கோமாளி" பிரிந்தார்!

கலைச்சுடர் அணைந்தது!

கலை உலகில் ஒரு சகாப்தம் முடிவுறுகிறது!

கலை உலகம் ஒரு நல்ல கலைஞரை இழந்தது, நாடகம் ஒரு சிறந்த நடிகரை இழந்தது, திரைவானம் ஒரு ஒளி மிக்க நட்சத்திரத்தை இழந்தது, தமிழ்த்தாய் ஒரு நல்ல மகனை இழந்தாள், நடிகர்கள் ஒரு நல்ல அண்ணனை இழந்தார்கள், இந்நாடு ஒரு "நல்ல பியை" இழந்தது!

## திருமண அழைப்பிதழ்

கர்நூல் திருவேங்கட முதலியாரின் குமாரி தோழியர் கோகிலாவை 16—9—57 அன்று எனது வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றுக்கொள்கிறேன். மேற்படி திருமண விழா "நம் நாடு" பொறுப்பாசிரியர் திரு. காஞ்சி கல்யாண சுந்தரனார் அவர்கள் தலைமையில் நடைபெறும். திருந்திய திருமணம்பற்றி தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விளக்குவதுடன், மணமக்களுக்கு வாழ்த்துரையும் வழங்குவார்.

இடம்: பல்லாவரம் அடுத்த கவுல் பஜார்.

காலம்: 16—9—57 திங்கள் காலை 9 மணி அளவில்.

அன்பன்,

இராமச்சந்திரன்.

## நீராவிக் கப்பல் உண்டான கதை-(4)



1807ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புல்டன் கட்டிய கப்பல் முடிவுற்றது. நியூயார்க் நகரில் ஒரு கப்பல் தளத்தில் அந்தக் கப்பல் தயாராக இருந்தது. ஊரில் அதைக் குறிப்பிடும்பொழுது "புல்டனின் பைத்தியச் செயல்!" என்று குறிப்பிட்டார்கள். 1807 ஆகஸ்ட் 17ந் தேதி, புல்டனின் நீராவிக் கப்பல் புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும், கப்பல் நின்றுவிட்டது. புல்டனின் பைத்தியக்காரத்தனம் தோல்வியடைந்துவிட்டதாகக் கரையிலிருந்தவர் சிரித்துக் கேலி செய்தார்கள்.

கரையிலிருந்தவர் செய்த கேலிகளை லட்சியம் செய்யாமல், புல்டன் கப்பலை மீண்டும் கிளப்பினான். கப்பல் செல்ல ஆரம்பித்தது. கேலி செய்தவர்கள் வாயடைத்துப் போனார்கள். புல்டனின் கப்பல் நீராவியின் உதவியால் வேகமாகச் சென்றது. கேலி போய், கரையிலிருந்து ஆரவாரம் வந்தது. நியூயார்க் நகரிலிருந்து கிளம்பிய கப்பல் ஆல்பனி என்ற ஊர் வரைச் சென்று திரும்பியது. மொத்தம் 300 மைல்களை 62 மணி நேரத்தில் அது கடந்து வந்தது.

புல்டனின் முதற் கப்பல் நீராவியால் ஓட ஆரம்பித்ததும், "பைத்தியக்காரத்தனம்" என இகழப்பட்டது பின்பு "புத்திசாலித்தனமாக" மாறிவிட்டது. புல்டனுக்கு பணம்உதவ சிலர்முன்வந்தார்கள். புதிய கப்பல்களைக் கட்டுவதற்கு புல்டன் முற்பட்டார். நீராவிக் கப்பல் கட்டுவதற்கென்று கப்பல் தளம் உண்டாக்கப்பட்டது. பெரு மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு, கப்பல் கட்டுந்தொழில் மும்முரமானது. நீராவிக்கப்பல்கள் வளர்ச்சியடையும் என்பது பலருக்குப் பட்டது.

(தொடரும்)

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 556